Des: Sinan

AHARAM அகரம்

தரம் 5 - II வரை

எண்: 07 எழுத்து: 02 பெப்ரவரி 2013

www.aharam.lk

சுதந்திரத்தைக் கொண்டாடுவோம்!

65 வது சுதந்திர தினம்

ரபீஉல் அவ்வல்;

வசந்தத்தின் செய்தி

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம் இதழை தற்போது E-Magazine வடிவில் பார்வையிடலாம்



அகரம் இணையதளம்

www.aharam.lk

உங்களது பாடசாலை நிகழ்வுகள், மாணவர் சாதனைகள், பாடசாலைச் செய்திகள் என்பவற்றை உடனுக்குடன் அனைவருக்கும் தெரியப்படுத்த

உங்கள் வீடியோக்களைப் பார்வையிட
www.youtube.com/aharamJmf

உங்கள் செய்திகள், ஆக்கங்கள் சமூக வலைத்தளத்தில்

facebook இல் Like செய்யுங்கள்...

www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 பெப்ரவரி, 2013 எழுத்து: 02

அகரம்

PUBLIC LIBRARY JAFFNA.

உள்ளே...

சுதந்திரத்தைக் கொண்டாடுவோம் 65 வது சுதந்திர தினம் 24

றபீஉல் அவ்வல் வசந்தத்தின் செய்தி 37

அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு... 21

15

கணிதம் அது வேப்பங்காய் அல்ல! 23

08

09

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, முன்னாள் தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

பாடத்திட்டம்

கணிதம்	31	தமிழ்	29
விஞ்ஞானம்	34	புலமைப் பரிசில்	39

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு – 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
E-Mail: *editor@aharam.lk*
www.aharam.lk

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள தம்பி தங்கைகளே!

மனிதனைப் படைக்க நாடிய அல்லாஹ் அது பற்றி வானவர்களிடம் பூமியிலே ஒரு பிரதிநிதியை உண்டாக்கப் போகின்றேன் என்று சொன்னான் என அல்குர்ஆன் நமக்குச் சொல்லித் தருகின்றது.

பிரதிநிதி என்பவர் குறிப்பிட்ட ஒருவரினால் அவர் சார்பான குறித்த ஒரு பணிக்காக குறித்த ஓர் இடத்திற்கு அனுப்பப்படுபவராவார். மனிதன் ஆனவன் அல்லாஹ்வினால் நாடப்பட்ட ஒரு பணிக்காக அனுப்பப்பட்டவனாவான். அவன் பணியாற்ற வேண்டிய இடம் இந்தப் பூமியாகும்.

இபாதத், இமாரத், கிலாபத் ஆகிய பணிகளுக்காகவே அல்லாஹ்வினால் மனிதன் இந்தப் பூமிக்கு அனுப்பப்பட்டான். இதில் முதலாவது பணி வாழ்வையே வணக்கமாக்கிக் கொள்வதாகும். அதாவது, மனிதனுடைய ஒவ்வோர் எண்ணத்தையும் ஒவ்வொரு செயலையும் அல்லாஹ்வின் விருப்பத்திற்குரியதாக ஆக்கிக் கொள்வதாகும். அந்த வகையில் இந்தப் பணியானது அல்லாஹ்வுக்கும் குறித்த அடியானுக்கும் இடையில் உள்ள ஒரு விடயமாக அமைகின்றது.

அடுத்தடுத்த பணிகளான 'இமாரத்' பூமியை வளப்படுத்துதல் என்பதும் 'கிலாபத்' அல்லாஹ்வின் இறைமையை இந்தப் பூமியில் நிலைநாட்டுதல் என்பதும் மனிதனால் அவன் அனுப்பப்பட்ட பூமியில் செய்யப்பட வேண்டிய பணிகளாக அமைகின்றன.

நாம் இந்த இலங்கை நாட்டில் பிறந்தவர்கள் என்ற வகையில் இது நமது தாய் நாடாகும். நாம் அல்லாஹ்வின் பிரதிநிதிகளாகப் பணியாற்ற அல்லாஹ் நமக்காகத் தேர்ந்தெடுத்துள்ள இடம் இலங்கைத் திருநாடாகும். எனவே, இந்த நாட்டை வளப்படுத்துவதும் இந்தப் பிரபஞ்சத்தின் சொந்தக்காரனான அல்லாஹ்வை ஏனைய மக்களுக்கும் அறிமுகம் செய்வதும் நம் மீது அல்லாஹ் சுமத்தியிருக்கும் பணியாகும்.

எந்தவொரு பணியின் மீதும் உள்ளம் நிறைந்த ஈடுபாட்டோடு செயலாற்றும்போதே அந்தப் பணியின் விளைவு உச்சமானதாகவும் திருப்திகரமானதாகவும் அமையும். எனவே, இமாரத், கிலாபத் ஆகிய இரண்டு விடயங்களையும் உச்சகட்ட வினைத்திறனுடன் சாத்தியமாக்குவதற்கு அப்பணிக்கான களமாகிய நமது தாய் நாடான இந்தப் பூமியையும் அதன் மக்களையும் அதன் பௌதிகத்தையும் நாம் உளமார நேசிக்க வேண்டும். அவற்றின் மீது பற்றும் அன்பும் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மீது அல்லாஹ் சுமத்தியிருக்கும் பணியில் ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் செயலாற்ற முடியும்.

இந்த நாட்டின் அபிவிருத்திக்கும் இறைமைக்கும் நமது முன்னோர் மெச்சத்தக்க பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள். இருந்தபோதும் அண்மைய காலங்களில் ஏற்பட்ட இன ரீதியான முரண்பாடுகளின் காரணமாக விரும்பத்தகாத நடத்தை மாற்றங்கள் நம்மில் திணிக்கப்பட்டது உண்மையே. இருந்தபோதும் முஸ்லிம் என்கின்ற வகையில் எந்தக் காலத்திலும் நாம் அல்லாஹ்வின் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்ட பூமியின் மீது அன்பும் பற்றும் கொண்டவர்களாகவே இருக்க வேண்டும். அதுவே நமது பணிக்கான அத்திவாரமாகும்.

நாம் இந்த நாட்டின் கௌரவமுள்ள பிரஜைகள்; இந்த தேசத்தின் பங்காளிகள்; அல்லாஹ்வின் பிரதிநிதிகள். நமது முன்னோர்களைப் போலவே இந்த அழகிய தேசத்தின் அபிவிருத்திக்காகவும் இறைமையைக் காக்கவும் அதன் மக்களின் நல்வாழ்வுக்காகவும் அதன் பௌதிகத்தின் மாசுபடாத பயன்பாட்டுக்காகவும் நம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் செய்வதற்கு நாம் சித்தமாக இருக்க வேண்டும். அதற்காக நாம் தயாராவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



عَنْ مَالِك رَحِمَهُ اللهُ أَنَّهُ بَلَغَهُ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ تَرَكْتُ فِيكُمْ أَمْرَيْنِ لَنْ
تَضِلُّوا مَا تَمَسَّكْتُمْ بِهِمَا كِتَابَ اللَّهِ وَسُنَّةَ نَبِيِّهِ (موطأ مالك)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"உங்களிடம் நான் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன். உறுதியாக நீங்கள் அதனைப் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் வழிதவற மாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதமும் அவனுடைய தூதருடைய வழிமுறையுமாகும்." (முஅத்தா மாலிக்)

இவ்வுலகுக்கு வழிகாட்டியாக இறைவனால் அனுப்பப்பட்ட உத்தமத் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்த ரபீஉல் அவ்வல் மாதத்தில் நாங்கள் இருக்கின்றோம். இம்மாதத்தில் நபியவர்களைப் பற்றி அதிகமாகப் பேசி நினைவுகூருகின்ற நாம் அவர்கள் மீது எமது அலாதியான அன்பை வெளிக்காட்டுவது மாத்திரமல்லாது அவர்கள் இவ்வுலகுக்கு எடுத்துவந்த அழகிய வழிகாட்டல்களையும் முன்மாதிரிகளையும் எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சிக்க வேண்டும்.

நபியவர்களிடத்தில் நாம் பின்பற்றி எடுத்து நடக்க வேண்டிய அழகிய முன்மாதிரிகள் நிறைந்து காணப்படுகின்றன. குறித்த ஒரு முன்மாதிரியை அல்லது வழிகாட்டலை தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு பின்பற்றி வாழப் பணிப்பதற்கு முன்னர், நபிகளார் அதனை தனது வாழ்வில் பின்பற்றி வாழ்ந்து காட்டினார்கள். இத்தகைய முன்மாதிரிமிக்க இறைத் தூதரையே நாம் எந்த சந்தர்ப்பத்திலும் எமது வாழ்க்கையில் முன்மாதிரியாக எடுத்து நடக்க வேண்டும். நபியவர்களின் இம்முன்மாதிரி தொடர்பாக அல்லாஹ் பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்;

"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவராக இருப்பவருக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கின்றது." (அல்அஹ்ஸாப்: 21)

இந்த அல்குர்ஆன் வசனமும் நபிகளாரிடத்தில் அழகிய முன்மாதிரி இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துகிறது. இவ்வசனத்திற்கு ஒரு விளக்கமாகவும் ஓர் எடுத்துக்காட்டாகவும் மேற்கூறப்பட்ட ஹதீஸ் அமைந்துள்ளது. இந்த விடயத்தை நபியவர்கள் தனது இறுதி ஹஜ்ஜின்போதும் மக்களுக்கு நினைவுபடுத்தியுள்ளார்கள்.

நபியவர்களிடத்தில் காணப்பட்ட அழகிய முன்மாதிரிகள் பலவற்றை நாம் ஹதீஸ்களின் வாயிலாகவும் எமது இஸ்லாமிய வரலாறுகள் ஊடாகவும் கற்றுக் கொள்ள முடிகின்றது. அவர்கள் தனது குடும்பத்தோடும் சமூகத்தோடும் ஏனைய மனிதர்களோடும் ஜீவராசிகளோடும் உத்தமராகவே நடந்து கொண்டார்கள். நபியவர்களிடம் யாரேனும் ஓர் உதவியைக் கேட்டால் அதனை எவ்வாறேனும் நிறைவேற்றி விடுவார்கள்; முடியாவிட்டால் உதவி கேட்டவர் மன நிறைவோடு திரும்பிச் செல்லும் வண்ணம் நல்ல முறையில் பேசி அனுப்புவார்கள். இவ்வாறான பல விடயங்களை நாம் அந்த உத்தமரின் வாழ்க்கைப் புத்தகத்தில் வாசிக்க முடிகின்றது.

கண்ணியமிக்க நபியவர்கள் மென்மையான இதயம் கொண்டவர்கள்.

20ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் மேற்கொண்ட பின்னர்

உஹத் யுத்தம் தொடர்பாக பல்வேறு கருத்துப் பரிமாறல்களுக்குப் பின்னர் மதீனாவை விட்டு வெளியேறி போராடுவது என்ற முடிவுக்கு வந்த அனைவரும் அதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டனர். உஹதுக்குப் புறப்பட முன்னர் வெள்ளிக் கிழமை ஜுமுஆவில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உறுதியோடு இருக்குமாறு ஸஹாபிகளுக்கு தைரிய மூட்டினார்கள். பொறுமைக்கு நிச்சயம் அல்லாஹ்வின் உதவி கிடைக்கும் என்று சுபசோபனத்தைத் தெரிவித்தது, எதிரியைச் சந்திக்க தயாராகும்படி ஸஹாபிகளைப் பணித்தார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உரையைக் கேட்டு முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ந்தனர்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் அபூபக்ர், உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் நபியவர்களின் இல்லத்திற்குச் சென்று நபியவர்களுக்குத் தலைப்பாகை, ஆடைகளையும் அணிவித்தார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் யுத்த ஆயுதங்களுடனும் இரண்டு கவச ஆடைகளுடனும் வாளைக் கழுத்தில் தொங்கவிட்டவர்களாக முஸ்லிம்களுக்கு முன் தோன்றினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்களிடம் ஸஅது இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் உஸைத் இப்னு ஹுழைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் "மதீனாவிலிருந்து வெளியேறித்தான் போர் செய்ய வேண்டும் என்று நபியவர்களை நீங்கள் நிர்ப்பந்தித்து விட்டீர்கள். எனவே, உங்களது அபிப்பிராயத்தை விட்டுவிட்டு அதிகாரத்தை நபியவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று கூறினார்கள்.

மக்கள் தங்களின் செயல்களுக்காக வருந்தினர். பின்பு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்கு மாறுசெய்ய விருப்பமில்லை. நீங்கள் விரும்பியதையே, அதாவது மதீனாவில் தங்குவதுதான் உங்களுக்கு விருப்பமானது என்றால் அதையே நீங்கள் செய்யுங்கள்" என்று மக்கள் கூறினார்கள்.

நபியவர்கள், "ஓர் இறைத்தூதர் தனது கவச ஆடையை அணிந்தால், அதன் பிறகு அல்லாஹ் அவருக்கும் அவருடைய எதிரிகளுக்கும் மத்தியில் தீர்ப்பளிக்கும் வரை அதைக் கழற்றுவது அவருக்கு ஆகுமானதல்ல" என்று கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி, முஸ்னத் அஹ்மத்)

தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நபியவர்கள் அழகாக கற்றுத் தந்துள்ளார்கள். நபியவர்களின் கருத்துக்கு மாறாக பெரும்பான்மையானோரின் அபிப்பிராயம் மதீனாவை விட்டு வெளியேறி யுத்தம் புரிவதாக இருந்தாலும்கூட அதில் உடன்பட்ட நபியவர்கள் அத்தீர்மானத்தை அமுல்படுத்துவதற்குத் தயாரானார்கள்.

தமது கருத்துக்கள் வலுத்ததாலேயே நபியவர்கள் அதற்கு உடன்பட்டார்கள் என்பதை அறிந்து மனம் வருந்திய ஸஹாபிகள் தமது கருத்தை விட்டுக் கொடுத்து நபியவர்களின் அபிப்பிராயத்திற்கேற்ப நடக்க முற்பட்டனர். ஆனால், ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் எவ்வாறு கட்டுப்பட்டு நடக்க வேண்டும், ஒரு விடயத்திற்குத் தயாரானால் எவ்வாறு தன்னம்பிக்கையோடு முன்னோக்கிச் செல்ல வேண்டும், குறிப்பாக யுத்தத்திற்குத் தயாரானால் அதிலிருந்து பின்வாங்கக் கூடாது மற்றும் தீர்மானத்தில் நம்பிக்கையோடு செயற்பட வேண்டும் போன்ற விடயங்களை நபியவர்கள் இதன் மூலம் கற்றுக் கொடுத்தார்கள். எனவே, நாமும் ஒரு தீர்மானம் மேற்கொண்டால் அதில் நம்பிக்கையோடும் உறுதியோடும் திடசங்கற்பத்தோடும் செயற்பட வேண்டும்.

தீர்மானம் மேற்கொண்ட பின்னர் அதற்குக் கட்டுப்படுவதும் திடஉறுதியோடு அத்தீர்மானத்தை முன்னகர்த்தலும் வெற்றிக்கு அடிப்படையாகும். தனது கருத்துக்கு மாறுபட்ட தீர்மானமாக இருந்தாலும் எவ்வித மனமுரண்பாடுமின்றி தூய்மையாக நடந்து கொள்ள வேண்டியது வெற்றியின் ஆரம்பம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)

தாயகம் நோக்கிய ரூஹின் பயணம்

எமது ரூஹிற்கு ஆரம்பம் ஒன்று உண்டு. ஆனால் முடிவோ அழிவோ இறப்போ கிடையாது. ஆனால், உயிர் என்பது அழியக்கூடியது. அல்லாஹ் எம்மிடம் எதிர்பார்ப்பது அவனுக்காக அவனுடைய தீனை வாழச்செய்வதற்காக எமது உயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என்பதைத்தான். உயிரைத் தியாகம் செய்தால் அதற்குப் பகரமாக அல்லாஹ் எமது ரூஹிற்கு சுவனத்தைத் தருவதாக வாக்களித்து விட்டான்.

உலகிலுள்ள மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் ஏன் ஜின்கள், மலக்குகள் என அனைத்தையும்விட மனிதன் உயர்ந்தவனாக இருப்பதன் காரணம் அவனில் ஊதப்பட்டிருக்கின்ற ரூஹ்தான். மனிதன் உடல், உயிர், ஆன்மா என்ற மூன்று வகையான அம்சங்களால் ஆனவன். உடலைப் பொறுத்தவரை அதனை எமக்கு இலகுவாக விளங்கிக்கொள்ள முடிந்தாலும் உயிர், ஆன்மா என்பன விளங்கிக்கொள்ள சற்று சிக்கலானவையாகும். இன்றைய சடவாத மேற்கு உலகம் உடலையும் உயிரையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால், ஆன்மாவை மறுக்கிறது. அதனால் தான் ஆன்மிகம் இல்லாத அறிவியலை மேற்கு வளர்த்து வருகிறது.

ரூஹ் (ஆன்மா) என்றால் என்ன?

ரூஹ் (ஆன்மா) என்றால் என்ன? என்ற கேள்வி இன்று மட்டுமல்ல; நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது காலத்திலும் இருந்துள்ளது. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

"ஒரு முறை நான் மதீனாவில் நபியவர்களுடன் ஒரு வேளாண்மைப் பூமியில் இருந்தேன். அப்போது யூதர்களின் குழு ஒன்றை நாம் கடந்து சென்றோம். அப்போது, அவர்களில் ஒருவர் எழுந்து வந்து அபுல் காஸிமே ரூஹ் என்றால் என்ன என்று எமக்கு அறிவியும் என்றார். நபியவர்கள் மௌனமானார்கள். அவர்களுக்கு இறைவனிடமிருந்து செய்தி (வஹி) அறிவிக்கப்படுவதை நான் உணர்ந்தேன். (வஹி வரும்போது ஏற்படும் சிரமம் விலகி) அவர்கள் நிதானித்த பின்னர் நபிகளார் பின்வரும் திருமறை வசனத்தை அந்த யூதருக்கு ஓதிக் காண்பித்தார்கள்.

"நபியே! உம்மிடம் அவர்கள் ரூஹைப் பற்றிக் கேட்கிறார்கள். ரூஹ் என்பது என் இறைவனுடைய கட்டளையிலிருந்து உள்ளதாகும். அது பற்றி உமக்கு மிகச் சொற்ப அறிவே அன்றி நாம் வழங்கவில்லை என்று நீர் கூறும்." (17: 85)

ரூஹ், தமிழில் ஆன்மா அல்லது ஆத்மா என்றும் உயிர் என்றும் மொழி பெயர்க்கப்படுகின்றது. ரூஹ் என்பது உயிரல்ல. நாம் கூட உயிரும் ரூஹும் ஒன்று என்றுதான் நினைத்திருப்போம். ஆனால், உண்மையில் ரூஹ் என்பது வேறு; உயிர் என்பது வேறு. அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களோடு ரூஹ் பற்றி அல்லாஹ் எமக்கு அளித்துள்ள சிறு விளக்கத்தோடு சற்று சிந்தித்துப் பார்த்தாலே போதும் ரூஹும் உயிரும் வேறுபட்ட இரண்டு அம்சங்கள் என்பதை அறிய முடியும். இங்கு ரூஹ் மற்றும் உயிர் என்பன எவ்வாறு வேறுபடுகின்றன என்பதற்கான சில ஆதாரங்களைப் பார்ப்போம்.

1. வளர்கின்ற அனைத்திற்கும் உயிர் இருக்கின்றது என்பதை விஞ்ஞானம் ஏற்றுக் கொள்கின்றது. தாவரங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள், பறவைகள் அனைத்தும் வளர்கின்றன. எனவே, அவற்றுக்கு உயிர் உள்ளதென்பதை எம்மால் விளங்க முடியும். அப்படியாயின் ஒரு பெண்ணின் சினை முட்டையும் ஆணின் விந்தணுவும் ஒன்று சேர்ந்ததில் இருந்து 42ஆம் நாள் ஆகும் வரை அக்கரு வளர்ச்சியடைகின்றதென்றால் அதற்கு உயிர் இருக்கின்றது என்று பொருள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது ஹதீஸின்படி 42ஆம் நாளில் அல்லாஹ் ஒரு வானவரை அழைத்து அவ்வானவரிடம் ஒரு ரூஹைக் கொடுத்து அதனை குறித்த தாயின் கருவறையில் உள்ள சிசுவில் கொண்டு சேர்க்குமாறு கட்டளையிடுகின்றான். தற்போது சற்று சிந்தியுங்கள். கரு 42ஆம் நாள் ஆகும்வரை வளர்ச்சியடைகின்றது. எனவே, அதற்கு உயிர் இருக்கின்றது. 42ஆம் நாளில்தான் ரூஹ் ஊதப்படுகின்றது. அப்படியாயின் உயிரும் ரூஹும் வேறுவேறு என்பது தெளிவாகிறது.

2. நாம் உறக்கத்திற்குச் செல்லும்போது அல்லாஹ் எமது ரூஹை எம்மை விட்டும் உயர்த்துகின்றான். ஆனாலும், உடலுக்கும் ரூஹிற்கும் இடையில் ஓர் இணைப்பு இருக்கும். யாருக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் (அஜல்) இன்னும் உள்ளதோ, யார் மீண்டும் விழித்து எழவேண்டும் என்று அல்லாஹ் நாடுகின்றானோ அவரது ரூஹை அல்லாஹ் அவ்வுடலுடன் சேர்த்துவிடுவதாகவும் யாரது அஜல் முடிகின்றதோ, யார் விழித்து எழக்கூடாதென இறைவன் நாடுகின்றானோ அவரது ரூஹை அப்படியே தன்பால் எடுத்துக்கொள்வதாகவும் அல்லாஹ் அல்குர்ஆனில் (39: 42, 6: 60) கூறுகின்றான். அப்படியாயின் உறக்கத்திலும் எமது இதயம் தொழிற்படுகிறது. நாம் அசைகின்றோம், சுவாசிக்கின்றோம். ஏனெனில், ரூஹ் உயர்த்தப்பட்டாலும் உயிர் இருப்பதால்தான் இவ்வாறு நடைபெறுகின்றது. எனவே, ரூஹும் உயிரும் வேறு என்பது விளங்குகிறது.

3. எமது மரணத் தறுவாயில் மலக்குல் மௌத் வருகை தந்து ரூஹைக் கைப்பற்றிக் கொண்டு வானத்தை நோக்கி உயர்ந்து செல்வார்கள். அப்போது அந்த ரூஹ் செல்லும் திசையை எமது பார்வை பின்தொடர்வதாக அல்குர்ஆன் கூறுகின்றது. ரூஹ் பிரிந்தாலும் உடலில் உயிர் இருக்கின்றதென்பதை இதிலிருந்து அறிய முடியும். உடலில் உயிர் இருப்பதால்தான் கண்கள் பார்க்கும் தொழிலைச் செய்கின்றன. ரூஹ் பிரிந்ததும் மரணித்தவரது கண்களை மூடிவிடுவது நபிகளாரின் சுன்னாவாகும்.

4. கண் தானம், இதய தானம், சிறுநீரக தானம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இவ்வாறான உறுப்பு தானங்கள் செய்வது மரணித்ததன் பின்னர்தான். இங்கு மரணித்ததன் பின் என்பது ரூஹ் கைப்பற்றப்பட்ட பின், உயிர் பிரிய முன் என்பதாகும். ரூஹ் பிரிந்தாலும் உடலில் உயிர் இருப்பதால்தான் உறுப்புக்கள் வேறாக்கப்படுகின்றன.



உடல் உஷ்ணம் தனிய முன்னர் உறுப்புக்களை மாற்ற வேண்டும் என்று நாம் கூறுவது இதனைத்தான். ஆக இங்கும் உயிர் வேறு ரூஹ் வேறு என்பது அழகாகத் தெரிகின்றது. உடலில் இருந்து உயிர் படிப்படியாகப் பிரிந்து தொண்டைக் குழியால் வெளியேறும் காட்சியை நவீன மருத்துவத் தொழில்நுட்பம் Thermal imaging camera மூலம் படம்பிடித்துள்ளது. (www.aliaalif.tk இணையத்தில் இதன் வீடியோவைப் பார்வையிடலாம்)

ரூஹ் பிரிந்தாலும் உடலில் குறிப்பிட்ட சில நேரங்களுக்கு உயிர் இருக்கின்றது. அதனால்தான் அந்த ஜனாஸா வானவர்களால் ரூஹ் சுமந்து செல்லப்படுவதைப் பார்ப்பதாகவும் அவ்வுடலை மண்ணறை நோக்கிக் கொண்டு செல்லும்போது அது நல்ல மனிதனாக இருந்தால் விரைவாகக் கொண்டு செல்லும்படியும் கெட்ட மனிதனாக இருந்தால் மண்ணறைக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்றும் உரக்கக் கத்துவதாகவும் நபிகளார் கூறினார்கள்.

மண்ணறையில் அடக்கம் செய்துவிட்டு நாம் நடந்துவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடி ஓசைகளைக்கூட அவ்வுடல் கேட்கின்றது என்றார்கள். ஜனாஸாவை வீட்டில் மக்கள் பார்வையிடும்போதும் அதனைக் குளிப்பாட்டும்போதும் கபன் செய்து தொழுகை நடத்தும்போதும் அவ்வுடலில் உயிர் இருப்பதால் அது சுற்றி நடக்கும் விடயங்களை அறிந்துகொள்ளவும் கூடும். அல்லாஹ்தான் அனைத்தையும் அறிந்தவன்.

இதனோடு தொடர்பாக பத்ர் யுத்தத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கு நினைவுகூர்வது பொருத்தமென நினைகின்றேன்.

அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "பத்ர் போரன்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 24 குறைஷித் தலைவர்களின் சடலங்களை நாற்றம் படிந்த கிணற்றில் வீசி எறியும்படி கட்டளையிட்டார்கள். நபியவர்கள் போரில் வெற்றி பெற்றால் அந்த இடத்தில் மூன்று நாட்கள் தங்குவது வழக்கம். அவ்வாறே பத்ர் போர் முடிந்த பின் அங்கு மூன்று நாட்கள் தங்கினார்கள். மூன்றாவது நாள் தனது வாகனத்தைத் தயார் செய்துகொண்டு தனது தோழர்களுடன் எதிரிகளின் சடலங்கள் போடப்பட்ட கிணற்றுக்கு அருகில் நின்றுகொண்டு அவர்களை அவர்களுடைய தகப்பனாரின் பெயரைக் கூறி அழைத்து இன்னாரின் மகன் இன்னாரே! இன்னாரின் மகன் இன்னாரே! முன்பே அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டிருந்தால் இப்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருந்திருக்கலாமே! நிச்சயமாக எமது இறைவன் எமக்கு வாக்களித்ததை நாம் உண்மையாகக் கண்டு கொண்டோம். உங்களது இறைவன் உங்களுக்கு வாக்களித்ததை நீங்கள் கண்டுகொண்டீர்களா? என்று கேட்டார்கள். அப்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே ரூஹுகள் அற்ற சடலங்களிடம் நீங்கள் என்ன பேசுகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் முஹம்மதின் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! நான் கூறுவதை அவர்களைவிட நீங்கள் அதிகம் கேட்கும் திறன் உள்ளவர்களாக இல்லை. மற்றுமோர் அறிவிப்பில் அவர்களைவிட நீங்கள் கேட்கும் ஆற்றல் அதிகமுடையவர்களாக இல்லை. ஆனால், அவர்களால் பதில் அளிக்க முடியாது என்றார்கள்."

(அல்புகாரி, முஸ்லிம், மிஷ்காதுல் மஸாபீஹ் 2, 345)

ரூஹ் பிரிந்து குறிப்பிட்ட சில நேரங்கள் வரைதான் உயிர் உடலில் இருக்கும். உயிர் இருக்கும்போது அவற்றால் செவிமடுக்க முடிந்தாலும் உயிர் பிரிந்து மரித்தபின் ஒரு போதும் அவற்றால் செவிமடுக்கவும் முடியாது; யாராலும் செவிமடுக்கச் செய்யவும் முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்.

"நிச்சயமாக நீர் மரித்தோரைக் கேட்கும்படி செய்ய முடியாது." (27: 80)

எமது ரூஹிற்கு ஆரம்பம் ஒன்று உண்டு. ஆனால் முடிவோ அழிவோ இறப்போ கிடையாது. ஆனால், உயிர் என்பது அழியக்கூடியது. அல்லாஹ் எம்மிடம் எதிர்பார்ப்பது அவனுக்காக அவனுடைய தீனை வாழச்செய்வதற்காக எமது உயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என்பதைத்தான். உயிரைத் தியாகம் செய்தால் அதற்குப் பகரமாக அல்லாஹ் எமது ரூஹிற்கு சுவனத்தைத் தருவதாக வாக்களித்து விட்டான். பாருங்கள்:

"நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும் செல்வங்களையும் அவர்களுக்கு சுவனம் நிச்சயமாக உண்டு என்ற ஒப்பந்தத்தில் விலைக்கு வாங்கிவிட்டான்." (9: 111)

ரூஹைப் படைத்த ஆரம்ப நிலை

அல்லாஹ் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை மண்ணால் படைத்துவிட்டு தனது ரூஹில் இருந்து முதலில் அவரது உடலுக்கு ஊதுகின்றான். தனது ரூஹ் செலுத்தப்பட்ட உடல் என்பதற்காக அல்லாஹ் ஆதமை கண்ணியப்படுத்தி அவருக்கு ஸுஜூத் செய்யுமாறு மலக்குகளைப் பணிக்கின்றான். இது பற்றி திருமறை இவ்வாறு பகர்கின்றது:

"உம் இறைவன் ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை வெளியாக்கி, அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக வைத்து நான் உங்களுடைய இறைவன் அல்லவா? என்று கேட்டதற்கு அவர்கள் ஆம். நாங்கள் சாட்சி கூறுகிறோம் என்று கூறியதை (அவர்களுக்கு) நினைவூட்டுவீராக." (7: 172)

தாயகம் நோக்கிய ரூஹின் ஆறு கட்டப் பயணம்

முதல் கட்டம்: அல்லாஹ் தனது ரூஹிலிருந்து ஊதி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை எழுப்பியதும் அடுத்த எமது ஆன்மாக்களின் பிறப்பு நிகழ்கின்றது. இதுவரை இவ்வுலகில் வாழ்ந்த அனைவரினதும், வாழ்ந்துகொண்டிருக்கும் 700 கோடிப் பேரினதும் இனி இவ்வுலகம் அழியும்வரை எத்தனை எத்தனை கோடிக்கணக்கான மனிதர்கள் வாழப்போகிறார்களோ அவர்கள் அத்தனை பேரினதும் ரூஹுகளை அல்லாஹ் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிலிருந்து வெளிப்படுத்தி ஆலமுல் அர்வாஹ் (ரூஹுகளின் உலகம்) எனும் இடத்தில் வாழச்செய்கிறான். இதுவே எமது ரூஹுகளின் முதல் பிறப்பும் முதல் வீடுமாகும். இங்குதான் நாம் அல்லாஹ்வை ரப்பாக ஏற்றுக் கொள்வதென சான்று பகர்ந்துள்ளோம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை மறையோடு...

பாவங்கள் கரைந்திட
கண்ணீர் முத்துக்களை வடித்தேன்
சில நொடிப் பொழுதுகளில்
பல மாற்றங்கள் கண்டேன்
உணர்வற்றுப் போனேன்
வேதனையால்

இறைமறையின் குரல் எங்கிருந்தோ
என்காதில் ஒலிப்பதை
உணர்ந்தேன்
இறைமறையை நோக்கி
ஆவலோடு விரைந்தேன்
வெற்றியின் சுவடுகளை
அதில் நான் கண்டேன்



உள்ளத்திற்கு ஒத்தடமாய்
மறையின் வசனங்கள்
இதயம் அமைதி கொண்டது
என்றும் என்நெஞ்சோடு
இறைமறை வசனங்கள்

பாத்திமா ஹகீமா
அல்ஹம்ரா வித்தியாலயம்
ஓட்டமாவடி

நங்கையே நீ மாறினால்...

நவீன நங்கையே!
நாகரிகம் வளர்த்த தங்கையே!
உன்னை பெற்றது
இஸ்லாமிய அன்னையே!
நீ இன்று வாழ்வதோ
நாகரிகத்தின் பின்னேயே

மறை சொன்ன வழியை
ஏன் மறந்தாய் – நீ
இறை தூதர் வழியை
ஏன் துறந்தாய் – நீ
உணவுக்கு செலவு
செய்து ஊதாரிஆனாய்
உடையில் மட்டும் ஏன்
சேமிக்கப் பழகினாய்

என் இஸ்லாமிய நங்கையே!
அநாகரிக மோகத்தை விட்டு விடு
நபி சொன்ன வழியில்
நடந்திடு
நீயும் சுவர்க்கத்துப் பெண்ணாவாய்

பஸ்னா சாஹிர்
பாத்திமா சாஹிரா பெ.அ.க.

வெற்றி என்பது...

என் தோழர்களே!
வெற்றி என்பது...
அடுத்தவர் பணிக்கு ஊக்கமளித்திட
பாராட்டு மொழி பகர்வது
உனது செயல்களும் திட்டங்களும்
உச்ச திறமையுடன் செயற்படுவது
உன் பேச்சு நோவினை செய்யும்போது
மௌனத்தை பேணுவது
அயலவர் ஆணவமாய் நடக்கும்போது
தாழ்மையாய் இருப்பது
உன் மீது அவதூறுகள் பரவும்போது
செவிடனாய் நடிப்பது
அடுத்தவர் துயரில் உழலும்போது
அனுதாபமாய் நடப்பது
கடமை உன்னை அழைக்கும்போது
விசுவாசமாய் உழைப்பது
துயரும் இடரும் நேரும்போது
துணிச்சலாய் செயற்படுவது
நேரம் நீண்டு செல்லும்போது
பொறுமையாய் இருப்பது

ஸப்னா ஹுஸைன், தரம்: 10
வெலம்பொட மு.ம.வி
வெலம்பொட

என்னை மரணம் அழைக்கிறதே!

மனம் துடிக்க
வியர்வை சிந்த
விழிகள் இருள
என் நாவு துடிக்கிறதே!

என் வாழ்வை
வண்ணச் சோலையை
காணப்போகும் கனவுடன்
என் மரணம் அழைக்கிறதே!

அஸ்ஹா அமான்
தரம்: 11
அல்/கஸ்ஸாலி ம.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்னு ஆமிர் (ரஹிமஹுல்லாஹ்)

- அல்குர்ஆன் ஓதல் முறையை அறிவுப்புச் செய்த இவரின் முழுப் பெயர் - **அப்துல்லாஹ் பின் ஆமிர் திமிஷ்கீ**
- பிறப்பு - **ஹி. 9 (கி.பி. 630).**
- மறைவு - **ஹி. 118 (கி.பி. 736).**
- அடக்கம் செய்யப்பட்ட இடம் - **திமிஷ்க்**
- இவர்களின் மூலம் அல்குர்ஆன் ஓதல் முறையை அறிவிப்புச் செய்தவர்கள் - **அபுல் வலீத் ஹிஷாம் அம்மார் திமிஷ்கீ மற்றும் அபூ உமர் அப்துல்லாஹ் பின் அஹ்மத் திமிஷ்கீ ஆகியோர்.**

முனவ்வரா அமீனுதீன், செம்மண்ணோடை

அல்குர்ஆன் வசனங்களில் கூறப்பட்டிருப்பவை

1. முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அல்குர்ஆன் கூறும் மறுபெயர் என்ன? அஹ்மத் (61: 6)
2. தாயின் கருவறையில் தங்காமல் பிறந்த ஆணும் பெண்ணும் யார்? ஆதம் (அலைஹிஸ்ஸலாம்), அன்னை ஹவ்வா (அலைஹஸ்ஸலாம்)
3. எந்தவித ஆணின் தீண்டுதலுமின்றி ஒரு பெண்ணுக்கு மகனாகப் பிறந்தவர் யார்? ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) (3: 47)
4. ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு நன்மாராயம் கூறப்பட்ட குழந்தையின் பெயர் என்ன? யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்) (3: 39)
5. இறை வணக்கத்திற்கென மனிதர்களுக்காக அமைக்கப் பெற்ற முதல் வீடு எது? மக்காவிலிருக்கும் புனித கஃபதுல்லாஹ் (3: 96)
6. போர் விலக்கப்பட்ட மாதங்கள் என்று அல்குர்ஆன் குறிப்பிடும் மாதங்கள் எவை? துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப்
7. உஸைர் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை 'அல்லாஹ்வின் மகன்' என்று கூறிய சமூகத்தினர் யார்? யூதர்கள் (9: 30)
8. நரகத்திற்கு எத்தனை வாசல்களுண்டு என்று அல்குர்ஆன் கூறுகின்றது? ஏழு (15: 44)
9. அல்லாஹ்விடமுள்ள ஐந்து ஞானங்கள். அதை வேறு எவரும் அறியமாட்டார் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. அந்த ஞானங்கள் எவை?

i. மறுமை நாள் எப்போது வரும்?

ii. மழை எப்போது பொழியும்?

iii. கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா?

iv. நாளைய தினம் நாங்கள் செய்வது, சம்பாதிப்பது எதனை?

v. தாங்கள் எந்த பூமியில் இறப்போம்?

இந்த 5 ஞானங்களை அல்லாஹ் ஒருவன் மட்டுமே அறிவான். (31: 34)

பாத்திமா ஹப்னா,
செம்மண்ணோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவுகள்

- ⇨ இலங்கை சுதந்திரம் அடைந்த தினம் – 1948.02.04
- ⇨ இலங்கையின் குடியரசு தினம் – 1972.05.22
- ⇨ சுதந்திர இலங்கையின் முதலாவது தேச பிதா – **டீ.எஸ். சேனநாயக்க**
- ⇨ சுதந்திர இலங்கையின் முதலாவது ஜனாதிபதி – **வில்லியம் கொபல்லாவ**
- ⇨ சுதந்திர இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி – **ஜே.ஆர். ஜெயவர்தன**
- ⇨ இலங்கையின் முதலாவது பிரித்தானிய தேசாதிபதி – **பிரட்றிக் நோர்த்**
- ⇨ இலங்கையில் முதன் முதலில் நாணயக் குற்றி வெளியிடப்பட்ட ஆண்டு – **1885**
- ⇨ இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றும் உரைகளை பதிவு செய்யும் புத்தகம் – **ஹன்சார்ட்**
- ⇨ இலங்கையில் முத்திரை முதன் முதலில் வெளியிடப்பட்ட ஆண்டு – **1857**
- ⇨ Internet (மின்னஞ்சல்) இன் தந்தை – **வினிட் செர்ப்**
- ⇨ நவீன பொருளாதாரத்தின் தந்தை – **அடம் ஸ்மித்**
- ⇨ தீயினால் எரியாத பொருள் – **அஸ்பெஸ்டஸ்**
- ⇨ குருதியின் சிவப்பு நிறத்திற்குக் காரணம் – **செங்குழியங்களிலுள்ள ஈமோகுளோபின்**

எம்.எஸ் ஸம்லி நுஹ்லா, தரம் – 8
கமு/ அல்ஹம்றா வித்தியாலயம், மருதமுனை

உலகிலே மிகச் சிறிய பறவை

உலகிலே மிகச் சிறிய பறவை கியூபா நாட்டில் உள்ள 'மெல்ஸிகா ஹெலனே' என்ற தேன்சிட்டுத்தான். அப்பறவையின் எடை 2 கிராம்தான். அலகு முதல் வால் வரை அதன் நீளம் 2 அங்குலம். பெண் பறவையைவிட ஆண் பறவை கால் அங்குலம் சிறியது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் உலகின் மிகச் சிறிய பறவை இதுதான்.

இதில் ஆண் பறவை வேகமாகச் சிறகுகளை அடிக்கும் தன்மை கொண்டது. அது ஒரு வினாடிக்கு 80 தடவைகள் இறக்கையை அடிக்கும். அப்பேது வீர் என்ற சப்தம் மட்டும் கேட்கும். ஆண் பறவையும் பெண் பறவையும் தனித்தனியாகவே பறக்கும். இவற்றின் இனச்சேர்க்கை சில வினாடிகளில் முடிந்து விடும். இந்த நேரத்தைத் தவிர மற்ற வேளைகளில் ஆணும் பெண்ணும் ஒன்றையொன்று கண்டு கொள்ளாது.

இவை சிலந்தியின் வலையைக் கொண்டு மரக்கிளைகளில் மிகச் சிறிய கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பதால் இப்பறவைகளுக்கு அடிக்கடி உணவு தேவைப்படும். சிறிய சிலந்திகளும் ஈக்களும்தான் இவற்றின் உணவு. ஆனால், இவற்றுக்கு மிகவும் பிடித்த உணவு பூந்தேன்தான். எனவே மலர்களைத் தேடி இவை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் சளைக்காமல் பறக்கும்.

எஸ்.எல். நௌஸானா பானு, தரம் - 10
பொ/ அல்றிபாய் மு.ம.வி.
தம்பாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கு அறிவு சேர்த்திடுவோம்

வாழ்வில் ஒரு முறை கிடைப்பது:
பெற்றோர் - வாலிபம்

மனதை இழிவுபடுத்துபவை:
பொய் - கோள் - திருட்டு

சென்றால் திரும்பிவராதது:
உயிர் - சொல் - வயது

யாராலும் திருட முடியாதது:
கல்வி - அறிவு

ஞாபகத்தில் இருக்க வேண்டியது:
மரணம் - உண்மை - கடமை

அற்பமாய் கருதக்கூடாதவை:
வயது - கடன் - கடமை

பஸ்னா சிஹாமா,
பாத்திமா சஹ்ரா பெ.அ.க,
ஓட்டமாவடி

கண்டுபிடிப்புக்கள்

புகையிரதம்	- ஸ்டீவன்சன்
வானொலி	- மார்க்கோனி
மின்சாரம்	- பெஞ்சமின் பிராங்ளின்
தொலைபேசி	- அலெக்சாண்டர் கிரகம்பெல்
மின்கலம்	- வொல்ட்டா
பிளாஸ்டிக்	- அலெக்ஸாண்டர் பார்க்கஸ்
கடிகாரம்	- ராம்ப்சன்
நைலோன்	- எஸ். நோர்த் தேர்ஸ்
வெப்பமானி	- கலிலியோ கலிலி
கிராமபோன்	- தோமஸ் அல்வா எடிசன்





முஹம்மத் ஹுமைஸ்,
அக்/ பொத்துவில் ம.க.
பொத்துவில்



விஞ்ஞான விளக்கம்

01. சந்திரனில் குழாய் மூலம் குளிர்பானம் அருந்த முடியாது.

குழாய் மூலம் குளிர் பானம் அருந்தும்போது வளி உள்ளெடுக்கப்படுவதால் பானம் அருந்தக் கூடியதாக வுள்ளது. ஆனால், சந்திரனில் வளி காணப்படுவதில்லை. எனவே, உறிஞ்சும்போது பானம் உள்ளே வரமாட்டாது.

02. அதிகமாக உப்பு சேர்க்கப்பட்ட உணவை உட்கொண்ட ஒருவருக்கு அதிக தாகம் ஏற்படல்.

உணவில் உப்பு செறிவு அதிகரிப்பதால் உடற் கலங்களில் இருக்கும் நீர் அகத்துறிஞ்சப்படும். இந்நிலையில் உடற்கலங்களுக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட தாகம் ஏற்படும்.

03. குளவி கொட்டிய ஒருவருக்கு அதே இடத்தில் சிறிதளவு சுண்ணாம்பு தடவப்படும்.

குளவி கொட்டிய இடத்தில் உண்டாவது ஒருவகை அமிலமாகும். சுண்ணாம்பு ஒரு காரமாகும். ஆகவே, அங்கு வலி குறைவடையும்.

04. வான வெடிகளில் பல நிறங்களில் ஒளி வெளிப்படும்.

வான வெடிகள் உருவாக்கப்படும்போது பல்வேறு இரசாயன உப்புக்கள் சேர்க்கப்படுகின்றன. இதன் காரணமாக பல நிறங்கள் உண்டாகும்.

05. பிறந்த குழந்தையை அழச்செய்வதன் நோக்கம்.

பிறந்தவுடன் குழந்தையின் சுவாசப்பையின் இயக்கம் சீராக நடைபெற மாட்டாது. குழந்தையை அழச் செய்வதன் மூலம் சுவாசப்பை சுருங்கி தளர்ந்து சீர்படுத்தப்படுகிறது.

ஏ.எஸ்.எப். அஷ்ரப் ஸனீரா
தி/ ஆயிஷா மகளிர் வித்தியாலயம்
கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலகங்களும் அவற்றின் குறியீடுகளும்

மூலகங்கள்	குறியீடுகள்
தோரியம்	Th
பிரான்சியம்	Fr
பிளாற்றினம்	Pt
கல்லியம்	Ga
நிக்கல்	Ni
ஜேமானியம்	Ge
ஆசனிக்கு	As
ரேடியம்	Ra
கட்மியம்	Cd
வனேடியம்	V
ஆகன்	Ar
மங்கனீசு	Mn
குளோரீன்	Cl
இரும்பு	Fe
கோபாற்று	Co
சீசியம்	Cs
வெள்ளி	Ag
புரோமின்	Br
இந்தியம்	In
அயடின்	I
யுரேனியம்	U

அர்ஷானி பாலகுரு, தரம் - 11

நோபெல் பரிசு பெற்ற முஸ்லிம்கள்

அன்வர் சதாத் - அமைதி	(1978)
யாஸிர் அரபாத் - அமைதி	(1994)
சிரின் எபாதி - அமைதி	(2003)
முஹம்மத் அல்பராதி - அமைதி	(2005)
முஹம்மத் யூனுஸ் - அமைதி	(2006)
தவக்கல் கர்மான் - அமைதி	(2011)
நஜீப் மஹ்பூஸ் - இலக்கியம்	(1988)
ஓர்ஹான் பமுக் - இலக்கியம்	(2006)
அப்துஸ் ஸலாம் - பௌதிகவியல்	(1979)
அஹ்மத் ஸிவைல் - இரசாயனவியல்	(1999)

எம்.ஆர்.எம். மாஸின்
க/ அஸ்ஹர் கல்லூரி, அக்குரணை

பொது அறிவு

1. இலங்கையில் செய்மதித் தொடர்பு நிலையம் எங்கு அமைந்துள்ளது? **பாதுக்கையில்**
2. சாரணர் இயக்கத்தின் தாபகரின் பெயர் என்ன? **பேடன் பவுல் பிரபு**
3. யூரோ நாணயம் எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது? **1999ம் ஆண்டு**
4. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எத்தனையாம் ஆண்டு அமைக்கப்பட்டது? **1974ம் ஆண்டு**
5. சூரிய கிரகணத்தின் மூலம் கண்டறியப்பட்ட வாயு எது? **ஹீலியம்**
6. உலகின் மிகப் பெரிய நாடு எது? **ரஷ்யா**
7. உலகிலுள்ள தேசியக் கொடிகளில் அதிகமாகக் காணப்படும் நிறம் எது? **சிவப்பு**
8. அமெரிக்க கொடியில் காணப்படும் நட்சத்திரங்கள் எத்தனை? **50**
9. உலக கணினி வலையமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்? World Wide Web (www)
10. இலங்கையின் மிகப் பெரிய கால்வாய் எது? **மினிப்பே கால்வாய்**
12. யாழ் குடாநாட்டில் வரலாற்றுப் பொருட்கள் காணப்படும் இடம் எது? **கந்தரோடை**
13. உலக சாதனை பதியப்படும் ஏடு எவ்வாறு அழைக்கப்படுகின்றது? **கின்னஸ்**
14. மகாவலி கங்கை எங்கு கடலுடன் கலக்கிறது? **திருகோணமலையில்**

எஸ். சமீறுல் ஹக், தரம் - 11
ஹிதாயத் நகர் மு.ம.வி,
ஹிதாயத் நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

الكَلِمَاتُ المُضَادَّةُ فِي المَعْنَى

எதிர்ச்சொற்களை தெரிந்து கொள்வோம்

1. كَبِيْرٌ	பெரிய	صَغِيْرٌ	சிறிய
2. قَرِيْبٌ	அருகில்	بَعِيْدٌ	தொலைவில்
3. نَشِيْطٌ	சுறுசுறுப்பான/ உற்சாகமான	كَسْلاَنٌ	சோம்பேறி
4. جَمِيْلٌ	அழகான	قَبِيْحٌ	அலங்கோலமான
5. ذَكِيٌّ	விவேகமான	غَبِيٌّ	முட்டாள்தனமான
6. سَرِيْعٌ	விரைவான	بَطِيْئٌ	தாமதமான
7. سَهْلٌ	இலகுவான	صَعْبٌ	கஷ்டமான
8. ضَيِّقٌ	இறுக்கமான	فَضْفَاضٌ	தளர்வான
9. مُسْتَقِيْمٌ	நேரான	مُتَعَوِّجٌ	வளைந்த
10. سَمِيْنٌ	கொழுத்த	نَحِيْفٌ	மெலிந்த
11. خَفِيْفٌ	பாரமற்ற	ثَقِيْلٌ	பாரமான
12. مُبْتَلٌّ	ஈரமான	جَافٌّ	காய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.	مَفْتُوحٌ	திறந்த	مُغْلَقٌ	மூடிய
14.	جَدِيْدٌ	புதிய	قَدِيْمٌ	பழைய
15.	طَوِيْلٌ	உயரமான/ நீண்ட	قَصِيْرٌ	குள்ளமான
16.	يَمِيْنٌ	வலது	يَسَارٌ	இடது
17.	مَلِيْئٌ	நிரம்பிய	فَارِغٌ	வெறுமையான
18.	حَارٌّ	சூடான	بَارِدٌ	குளிரான
19.	الْحَرَارَةُ	வெப்பம்	الْبُرُوْدَةُ	குளிர்
20.	عَمِيْقٌ	ஆழமான	ضَحْلٌ	ஆழமற்ற
21.	الْبِدَايَةُ	ஆரம்பம்	النِّهَايَةُ	முடிவு
22.	مُرْتَفِعٌ	உயர்வான	مُنْخَفِضٌ	தாழ்வான/ குறைவான
23.	اَوَّلٌ	முதலாவது	آخِرٌ	இறுதியான
24.	سَمِيْكٌ	தடித்த	رَقِيْقٌ	மெல்லிய
25.	بَصِيْرٌ	பார்வையுள்ள	أَعْمَى	குருடன்

கூட்டல்	جَمْعٌ ☜ +	
கழித்தல்	طَرْحٌ ☜ -	
வகுத்தல்	تَقْسِيْمٌ ☜ ÷	
சரி	صَحِيْحٌ ☜ ✓	
பிழை	خَطَأٌ ☜ X	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"How much do you know?"

Assalamu alaikum dear friends, ______________

Do you know about insects? Insects, of course you know many of them. So here is some basic information about insects.





- Insects belong to kingdom Animalia.
- They are arthropods.
- Arthropods, are animals with joints in legs.
- Some insects have wings.
- Now, let me tell you, there are more than a million of insects on earth, representing the half of known living organisms.

MOSQUITOES, TERMITES, ANTS, COCKROACHES, BUGS, LADYBIRDS, FIRE FLIES, DRAGON FLIES...

* Fill in the space with more insects. ______________________________





Friends, note that **SPIDER** IS not an INSECT !!!!
WoW! the world of insects is wonderful.

Log on to http://www.insects.org to find more on insects !

Some benefits of insects

1. Honey , from honey bees.
2. Silk, from silk worms.
3. Help in pollination.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Did you know about the ant that spoke to prophet Sulaiman (alai)? You may find it in the holy Quran

Sulayman said, 'My Lord, forgive me and give me a kingdom the like of which will never be granted to anyone after me.Truly You are the Ever-Giving.'
(Surah Sad: 35)

Your corner



Proverbs

- **Every black cloud has a silver line.**
- **Life is not a bed of rose.**
- **Set a thief to catch a thief.**
- **Rolling stone gathers no moss.**
- **Think before you leap.**

Minha Mubarak
Al-Gazzali C.C, Grade-2
Atulugama

Good thoughts by Great People

01. If we cannot love the person whom we see, how can we love god, whom we cannot see?
- Mother Teresa

02. Believing everybody is dangerous; believing nobody is very dangerous....
- Abraham Lincoln

03. Everyone thinks of changing the world, but no one thinks of changing himself..
- Leo Tolstoy

04. Don't compare yourself with anyone in this world. If you do so, you are insulting yourself
- Alen Strike

05. If you start judging people you will be having no time to love them...
- Mother Teresa

06. If someone feels that they had never made a mistake in their life, then it means they had never tried a new thing in their life....
- Einstein

M.S.Mohamed Shamry, Grade 10
T/R.K.M. Sri Koneswara Hindu College
Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





SRI LANKA

Sri Lanka is my country and it is an island in the Indian Ocean. This is an agricultural country. Most of the people are farmers. Our staple food is rice. There are several communities in our country. They are the Sinhalese, Tamils, Muslims and burghers. The population of Sri Lanka is about 19 millions.

Our main imports are food, clothes and machinery and our exports are tea, rubber and coconuts. We gained the Independence in 1948. Hon. Mahinda Rajapakse is the president of my country and the prime minister is Hon.T.B.Jayaratna.

We have a tropical climate in our country. Sri Lanka is famous throughout the world as a tourist paradise. Water falls, ancient ruins, sanctuaries, sandy beaches and botanical gardens are attracted by the tourists

A.N.Zeinab Sara, Grade:9,
P/Fathima .M.C.G,
Eng.medium

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

வரலாறு

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. “நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்று கூறியவர்.

i. ஜீ.எம். திரவிலியன் ii. ஈ.எச். கார்
iii. நேரு iv. ஆபிரஹாம் லிங்கன்

2. சிறந்த அரசியல்வாதியாக விளங்கிய பிரித்தானியப் பிரதமர்.

i. ஜவஹர்லால் நேரு
ii. எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா
iii. ஜோர்ஜ் புஷ்
iv. வின்ஸ்டன் சேர்ச்சில்

3. எத்தனையாம் ஆண்டு அசோகன் மன்னனாக முடிசூடினான்?

i. கி.மு. 128 ii. கி.மு. 281
iii. கி.மு. 218 iv. கி.பி. 215

4. தொல்பொருள் மூலாதாரங்களுள் அடங்காத ஒரு விடயம்.

i. நாணயம் ii. சிதைவுகள்
ii. கல்வெட்டு iv. நாட்டார் பாடல்

5. அருகிலுள்ள புராதன இலங்கைப் படத்தை வரைந்தவர்.

i. பாகியன்
ii. தொலமி
iii. சுலைமான்
iv. பிளினி

6. அவர் இலங்கையை எப்பெயரால் அழைத்தார்?

i. செரண்டிப் ii. தப்ரபேன்
iii. சிலான் iv. லங்கா

7. அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதியவர்.

i. பிளினி ii. ஹியுங்சாங்
iii. கௌடில்யன் iv. அரிஸ்டோட்டில்

8. ‘டிமுண்டோ’ என்ற நூலை எழுதியவர்.

i. அரிஸ்டோட்டில் ii. பிளினி
iii. பாகியன் iv. மொகஸ்தனிஸ்

9. கல்வெட்டு வகைகளுள் இடம்பெறாத ஒன்று.

i. குகைக் கல்வெட்டு
ii. குன்றுக் கல்வெட்டு
iii. மலைக்கல் வெட்டு
iv. சுவர்க் கல்வெட்டு

10. சூலவம்சம் என்ற பெயராலும் அழைக்கப்படும் நூல்.

i. மகாவம்சம்
ii. மகாவம்சத்தின் இரண்டாம் பாகம்
iii. தீபவம்சம் iv. போதிவசம்

11. இலங்கையின் இரண்டாம் மூன்றாம் தலைநகரங்களாக அமைந்த நகரங்கள் முறையே

i. பொலன்னறுவை, தம்பதெனியா
ii. தம்பதெனியா, பொலன்னறுவை
iii. அனுராதபுரம், தம்பதெனியா
iv. தம்பதெனியா, யாப்பகூவ

12. உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களுள் அடங்காத ஒரு நூல்.

i. தலதா சிறித ii. ராகதரங்கணி
iii. பூகாவலிய iv. குத்தில காவியம்

13. அருகிலுள்ள சிலை

i. புத்தர் சிலை
ii. நடராஜர் சிலை
iii. சியேசு சிலை
iv. அசோகர் சிலை

14. புராதன காலத்தில் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருக்காத ஒரு நாடு.

i. சீனா ii. உரோமம்
iii. ஜப்பான் iv. அரேபியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சீகிரியாவில் காணப்படாத ஓர் அம்சம்.

i. சுவரோவியம் ii. சுரங்க நீர்ப்பாசனம்
iii. பூங்கா iv. நீரகழி

16. இலங்கையின் வரலாறு எவ்வளவு காலம் பழமையானது?

i. 1500 வருடங்கள்

ii. 3500 வருடங்கள்

iii. 2500 வருடங்கள்

iv. 6000 வருடங்கள்

17. நிரல் 'அ'வுக்கு ஏற்ப நிரல் 'ஆ' வை ஒழுங்கு படுத்தினால் அமையும் சரியான விடை எது?

	அ	ஆ
i.	குகைக் கல்வெட்டு	A பதுளை
ii.	குன்றுக் கல்வெட்டு	B மிகிந்தலை
iii.	சுவர்க் கல்வெட்டு	C கடலாதெனிய
iv.	தூண் கல்வெட்டு	D கல்பொத்த

i. BCDA ii. BCAD
iii. CBAD iv. ABCD

18. பிளினி என்பவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

i. கிரேக்கம் ii. உரோம்
iii. சீனா iv. அரேபியா

19. 'பூகோள சாஸ்திரம்' என்ற நூலை எழுதியவர்.

i. தொலமி ii. பாகியன்
iii. பிளினி iv. மெகஸ்தனிஸ்

20. அனுராதபுரம் எந்த நதிக்கு அண்மையில் அமைந்துள்ளது?

i. கலா ஓயா ii. கல்லோயா
iii. மல்வத்து ஓயா iv. மகாவலி கங்கை

தரம் 10 விடைகள்

1. ii	2. iv	3. iii
4. iv	5. ii	6. ii
7. iii	8. i	9. iii
10. ii	11. i	12. ii
13. ii	14. iii	15. ii
16. iii	17. i	18. ii
19. i	20. iii	

தரம் 11

01.

1. 1795இல் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப் பற்றிய துறைமுகங்கள் அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.

(யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், நீர்கொழும்பு, கற்பிட்டி)
(3 புள்ளிகள்)

2. ஆளுநர் நோத் கண்டி மீது படையெடுத்த மைக்கான நான்கு காரணங்களைத் தருக. (4 புள்ளிகள்)

3. 1848 கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

4. கோல்புறூக் குழுவின் சிபாரிசுகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

1. யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி

2.

அ. கொழும்பு-திருமலை வீதியை கண்டி இராச் சியத்திற்கூடாக அமைக்க கண்டி மன்னன் அனுமதி மறுத்தமை.

ஆ. கண்டி எல்லையில் காவல் அரண்களை அமைக்க வேண்டி இருந்தமை.

இ. 1797 கிளர்ச்சிக்கு கண்டி மன்னன் உதவி புரிந்தமை.

ஈ. கரையோரத்திலிருந்து கண்டிக்குச் சென்ற வியாபாரிகளை அரசனின் வீரர்கள் கொடு மைப்படுத்தியமை.

3. பிக்குகள் அதிருப்தி அடைந்தமை

மன்னர் ஆட்சிசெய்தபோது பிக்குகள் செல் வாக்குடன் விளங்கினர். கண்டி மன்னர்கள் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பது தமது கடமை என்று செயல்பட்டனர். ஆனால் ஆங்கிலேயர் தமது சமயமாகிய கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பவே ஆர்வம் காட்டினர். கிறிஸ்தவ குருமாருக்கு வழங்கிய கௌரவத்தை பௌத்த பிக்குகளுக்கு வழங்கவில்லை. 1815 மார்ச் 02ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தில் ஐந்தாம் வாசகத்தில் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்போம் என்று ஆங்கிலேயர் வாக்குறுதி வழங்கியிருந்தனர். அந்த வாக்குறுதி மீறப்பட்டதனால் பிக்குகள் ஆங்கிலேயருக்கு எதிராக 1818இல் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானிகள் வெறுப்படைந்தமை

மன்னர் காலத்தில் பிரதானிகள் செல்வாக்குடன் விளங்கினர். அவர்கள் சிற்றரசர்கள் போலச் செயற்பட்டனர். படை திரட்டும் அதிகாரத்தையும் வருமானங்களைப் பெறும் உரிமைகளையும் அவர்கள் பெற்றிருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கில அலுவலர்களை விடவும் பிரதானிகள் செல்வாக்கு குறைந்தவர்களாக மாறினர். வழமையாகப் பெற்ற நிந்தகக் காணிகளின் வருமானத்தையும் பிரதானிகள் இழந்தனர். மேலும் ஆங்கிலேயருக்கு வரி செலுத்த வேண்டும் என்றும் இவர்கள் வற்புறுத்தப்பட்டனர். 1818 சுதந்திரக் கிளர்ச்சிக்கு பிரதானிகளே முக்கிய பங்கு வகித்தனர். கெப்பிட்டிபொல பிரதானி தலைமை தாங்கினார். கண்டி ஒப்பந்தத்தில் நான்காம் வாசகத்தில் கூறப்பட்டவாறு கண்டி அதிகாரிகளின் அதிகாரங்களை ஆங்கிலேயர் வழங்கியிருந்தால் இக்கிளர்ச்சி ஏற்பட்டிருக்காது.

4. சட்டவாக்கக் கழகம் ஏற்படுத்தப்பட்டமை

ஆளுநருக்கு சட்டம் இயற்றும் விடயத்தில் ஆலோசனை வழங்குவதற்காக சட்டவாக்கக் கழகம் கோல்புறூக் சிபாரிசின்படி ஏற்படுத்தப்பட்டது. இதில் 15 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். இவர்களுள் 9 பேர் உத்தியோக சார்புள்ளோர், 6 பேர் உத்தியோகசார்பற்றோர். உத்தியோக சார்பற்றோருள் 3 பேர் ஐரோப்பியராகவும் ஏனைய மூவரும் பறங்கியராகவும் சிங்களவராகவும் தமிழராகவும் இருந்தனர். இது ஏற்படுத்தப்பட்டதனால் ஆளுநரின் ஏகபோக அதிகாரம் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டது. சட்டவாக்கக் கழகம் படிப்படியாக வளர்ச்சியடைந்து பின்பு பாராளுமன்றமாக மாறியது.

ஆங்கிலம் போதனா மொழியாக ஆக்கப்பட்டமை

கோல்புறூக் குழுவினர் பாடசாலைகளில் ஆங்கிலமே போதனா மொழியாக இருக்க வேண்டும் என சிபார்சு செய்தனர். இதனால் சிங்களப் பாடசாலைகளும் தமிழ்ப் பாடசாலைகளும் மூடப்பட்டன. இதனால் கிராமங்களில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. நகரங்களிலேயே ஆங்கில பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இலங்கையரின் ஆங்கில அறிவு வளர்ச்சியடைந்தாலும் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இதனால் பாதிக்கப்பட்டன. 1848 கிளர்ச்சி ஏற்படுவதற்கும் சமய கலாசார மறுமலர்ச்சி இயக்கம் ஏற்படுவதற்கும் இது காரணமாக அமைந்தது.

கம்சபா முறை நீக்கப்பட்டமை

கோல்புறூக்கோடு இலங்கைக்கு வந்த கமறன் இலங்கையில் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்துவந்த கம்சபா முறையை நீக்கினார். கம்சபா (கிராம சபை) முறை கிராமங்கள் சிறப்பாக செயல்பட்டமைக்கும் ஜனநாயகப் பண்பு வளர்ச்சியடைவதற்கும் காரணமாக இருந்தன. கம்சபாவுக்குப் பதிலாக பிரித்தானியாவில் நடைமுறையில் இருந்த நீதிமன்ற முறையை கமறன் இங்கு அறிமுகப்படுத்தினார். இதனால் கிராம மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தனர். அவர்கள் பிரயாணத்திற்கும் முத்திரைக்கும் வக்கீலுக்கும் அதிக பணத்தை செலவளிக்க வேண்டி இருந்தது. இதுவும் 1848 கிளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

ஹதீஸ்... (03ஆம் பக்கத் தொடர்...)

அவர்களிடத்தில் குறுகிய மனம், தர்க்கிக்கும் சுபாவம், அசிங்கமான வார்த்தைகளை வெளியிடும் பழக்கம் மற்றும் தேவையற்ற விடயங்களில் தலையிடுவது போன்ற செயற்பாடுகள் அணுவளவும் இல்லாதவராகவே வாழ்ந்து காட்டினார்கள்.

அன்பின் சிறார்களே! நாமும் எமது நபிகளார் பிறந்த இம்மாதத்தில் அவர்களது வாழ்க்கையில் காணப்படும் அழகிய முன்மாதிரிகளை எடுத்து எமது வாழ்க்கையில் அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம்

அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு...

ஜே.எம். அஸீம் (நளீமி) www.azeemzain.org

புதுசு தரும் உற்சாகத்தில் செயற்பட்ட உங்கள் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட முக்கியமான சில விடயங்கள் இருக்கின்றன. அவற்றை மனதில் நன்கு பதித்து முன்னேற முயற்சி செய்யுங்கள்.

1. திட்டமும் திடஉறுதியும் (Planning & Persistence)

எம்மில் நன்றாகத் திட்டமிடக்கூடியவர்கள் பலர் இருப்பர். ஆனால் திடஉறுதி உள்ள வர்கள் வெகு சிலரே. திட்டம் வெற்றி பெற திடஉறுதியும் விடாமுயற்சியும் தொடர்ச் சியான செயற்பாடும் மிக முக்கியம்.

திடஉறுதி என்பது எதிர்ப்புகள் வலுக்க வலுக்க உங்கள் உறுதி வலுவடைவதைக் காட்டும். நாம் மிகச் சிறப்பாக திட்டமிட் டாலும் பிறர் என்ன சொல்வார்களோ என்ற மனப்பயம் எம்மிடம் குடிகொண்டுவிடலாம்.

மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற பயத்தால் எத்தனையோ நல்ல திட்டங்களை நாம் கைவிட்டிருப்போம். நம்பிக்கை வேண் டும்! எமக்கு எம்மில் நம்பிக்கை வேண்டும்! எமது முன்னேற்றத்திற்கு உதவாமல் உதவாக் கரை ஐடியாக்கள் சொல்லும், எம்மை நம்பிக் கையிழக்கச் செய்யும், எம்மைக் கேலி செய்யும், எம்மைக் குறை சொல்லும், எம்மை விமர் சிக்கும் எந்தவிதமான மனிதர்களையும் சட்டை செய்யாமல் எதிர்க்கும் மனோ வலிமை உங்களுக்கு வேண்டும்.

"பள்ளிக்கூடத்தை விட்டு ரொம்ப காலமாகிவிட்டால் மறுபடியும் படிப்பபைத் தொடர்வதை இலட்சக்க ணக்கான பேர் அலட்சியப்படுத்துகிறார்கள். காரணம், மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற பயம்தான்."

– நெப்போலியன் ஹில்

2. தீர்மானமின்மையைக் களைதல்

விரைவாகவும் திட்டவட்டமாகவும் ஒரு விடயத்தை தீர்மானிக்க உங்களால் முடியா விட்டால் உங்களால் சிறப்பாக செயற்பட முடியாது. சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்கும் பழக்கம் கொண்டவர்கள்தான் இலகுவில் வெற்றி பெறுகிறார்கள். சரியான நேரத்தில் எடுக்கும் சரியான முடிவே மிகப் பெரும் வெற்றிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியாளர்களுக்கும் தோல்வியடைந் தவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். வெற்றியாளர்கள் விரைவாகவும் திட்ட வட்டமாகவும் விவேகமான தீர்மானங்களை சாணக்கியமாக எடுப்பர். தீர்மானத்தை மாற்ற வேண்டி ஏற்பட்டால் மெதுவாக மாற்றுவர். ஆனால், தோல்வி அடைபவர்கள் மெதுவாக தீர்மானம் எடுப்பர். விரைவாக மாற்றிக் கொள்வர்.

விரைவாகவும் திட்டவட்டமாகவும் விவேகமான தீர்மானங்களை சாணக்கியமாக எடுப்பவர்களுக்கு உதாரணமாக ஹென்றி போர்ட்டைக் குறிப்பிடலாம். விரைவாகத் தீர்மானம் எடுக்கும் அவர் அவற்றை மாற்ற வேண்டியேற்பட்டால் மெதுவாகவே மாற்றிக் கொள்வார். இவரது இந்த திறமையே புதிய புதிய மொடல் கார்களை உறுதியோடு உற்பத்தி செய்ய வைத்தது. ஆலோசகர்கள், வாடிக்கையாளர்கள் எவ்வளவு சொல்லியும் அவர் முடிவை மாற்றத் தாமதித்தார். ஆனால், அந்த மாற்றம் அவசியப்படுவதற்கு முன்பே அவர் எடுத்த முடிவில் உறுதியாக இருந்ததற்கு வெற்றி கிடைத்தது.

3. தொடர்ந்து செயற்படுதல்

தொடர்ந்து செய்கின்ற சிறிய அமல் மறுமையில் கனதியானது என நபியவர்கள் நவின்றுள்ளார்கள்.

நீங்கள் வெற்றி பெற விரும்பினால் தொடர்ந்து செயலாற்றுங்கள். தோல்வியடைந்தவர்கள் எல்லாம் ஒரு வேலையை ஆரம்பித்து ஏதோ ஒரு காரணத்தினால் இடைநடுவே கைவிட்டவர்கள்தான். உங்களுக்கும் இப்படி இடைநடுவே கைவிட வேண்டியளவு சவால்கள் வரலாம். சந்தியுங்கள்; சரணாகதியடைந்து விடாதீர்கள். சரித்திரம் படைக்கப் போராடுங்கள். வெல்லுங்கள்.

தொடர்ந்தேர்ச்சியாக செயற்படுவதற்கான தீர்க்கமான திட்டம்

தொடர்ந்தேர்ச்சியாக செயற்படுவதற்கு தீர்க்கமான திட்டத்தை வகுத்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து செயலாற்றுவது எவ்வளவு கடினமான விடயம் என்பதை நீங்கள் அனுபவத்தில் அறிகின்றபோது அதன் பெறுமதி உங்களுக்குப் புரியும். தொடர்ந்து செயற்படுவதற்கான முதலாவது தடை இதுதான். தொடர்ந்து என்ன செய்ய வேண்டும் என்ற செயற்திட்டம் இல்லாதபோது உங்களால் தொடர்ந்து செயற்பட முடியாது. எனவே, தொடர்ந்து செயற்படுவதற்கான திட்டமும் (Planning) அதற்கான செயற்பாடுகளும் (Activities) உங்களிடம் இருக்க வேண்டும். எனவே, திட்டமிட்ட செயற்பாடுகள் உங்களை தொடர்ந்து செயற்பட வைக்கும்.

செய்வதற்கு ஒரு வேலையும் இல்லை என சும்மா இருக்கும் பலரை நீங்கள் கண்டிருப்பீர்கள். அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும் பலரையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். வேலைகள் நிறைந்து எதைச் செய்வதென்று தடுமாறும் பலரை பார்த்து சிரித்திருப்பீர்கள். தடுமாற்றத்தில் வேலைகளைக் குழப்பிக் கொண்டு செய்வதறியாது திகைத்திருப்பவர்களை பார்த்து பரிதாப்பட்டிருப்பீர்கள். சிலபோது நீங்களே என்ன வேலையைச் செய்வதென்று குழம்பிப் போயிருப்பீர்கள். இவ்வாறு அடுத்த வேலை தொடர்பாக பலவிதமான தோல்வி நிலைப்பாடுகளில் இருப்பதற்கு காரணம் எம்மிடம் தொடர்ந்தேர்ச்சியாக செயற்படுவதற்கான தீர்க்கமான திட்டம் இல்லாதது ஆகும்.

4. முன்வைத்த காலை பின்வைக்காத உறுதி

விடாமுயற்சியுடன் தொடர்ந்தேர்ச்சியாக செயற்படுவது குறித்து ஹென்றி போர்ட் குறிப்பிடும்போது,

"விடாமுயற்சி, முன்வைத்த காலை பின்வைக்காத உறுதி, இலக்கில் இம்மி பிசகாத குறி, திட்டவட்டமான குறிக்கோள் ஆகியவை தான் சாதனைகளுக்கு முக்கிய காரணங்கள். உதாரணமாக முஹம்மது நபியின் அதிசயமான, அற்புதமான வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் இன்றைய நவீன யுகத்தின் தொழில் மற்றும் நிதித் துறை சாதனையாளர்களுடன் ஒப்பிட்டால் விடாமுயற்சி என்ற மகத்தான விடயத்தில் அவர்களிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம். விடாமுயற்சியைத் தூண்டிவிடும் விசித்திரமான சக்தியை நீங்கள் ஆராய்ந்து பார்க்க விரும்பினால் முஹம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றைப் படியுங்கள்."

30ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் புதிய நீதியரசர்

இலங்கையின் 44ஆவது பிரதம நீதியரசராக மொஹான் மைத்திரி பீரிஸ் 2013 ஜனவரியில் பதவியேற்றார்.

இவர் முன்னாள் சட்ட மாஅதிபராவார்.

1975இல் இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்து 1981இல் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் இணைந்தார்.

சச்சின் டென்டுல்கார்

- இந்திய கிரிக்கட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், 2012 டிசம்பரில் 23 வருடங்களாக பங்கு பற்றிய சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளில் இருந்து விடைபெற்றார்.
- இவர் 1989ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கெதிராகப் பங்குபற்றிய ஒரு நாள் சர்வதேச போட்டிகள் மூலம் அறிமுகமானார்.

திரு. பீ. உமா சங்கர்,
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Comombo

இவரது ஒரு நாள் போட்டி சாதனைகள்

- ஒரு நாள் போட்டியில் அதிக ஓட்டங்கள்- 18,426
- அதிக சதங்கள்- 49
- அதிக அரைச் சதங்கள்- 96
- இரட்டைச் சதம் அடித்த முதலாவது வீரர்
- அதிக ஒரு நாள் போட்டிகளில் (463) பங்குபற்றியவர்
- ஓர் ஆண்டில் அதிக ஓட்டங்கள்.(1998ஆம் ஆண்டு 34 போட்டி 1894 ஓட்டங்கள்) பெற்றவர்
- 90 ஓட்டங்களுக்கு மேல் அதிக முறை (18) எடுத்தவர்
- அதிக நான்கு ஓட்டங்கள் (2016) பெற்ற வீரர்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் புதிய உறுப்பு நாடுகள்

2013 ஜனவரியில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆர்ஜென்டீனா, அவுஸ்திரேலியா, லக்ஸம்பேர்க், தென் கொரியா, ருவண்டா ஆகிய ஐந்து புதிய நாடுகள் அங்கத்துவம் பெற்றன.

இப் புதிய உறுப்பு நாடுகள் இரண்டு வருடங்கள் கடமையாற்றும்.

சுழற்சி முறையில் பதினைந்து நாடுகளைக் கொண்ட பாதுகாப்பு சபையில் பாகிஸ்தான் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் சக்திவாய்ந்த பாதுகாப்பு சபையானது அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பொறுப்பு வகிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர அங்கத்துவ நாடுகள் அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தைக் கொண்டாடுவோம்



65வது சுதந்திர தினம்

சுதந்திரத்தைக் கொண்டாடுவது மாணவர்களாகிய உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான நிகழ்வாகும். ஒவ்வொரு வருடமும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் நீங்கள் கலந்து கொண்டிருப்பீர்கள். வருடாந்தம் கொண்டாடுவது போலவே இம் முறையும் சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கு நீங்கள் தயாராகிக் கொண்டிருப்பீர்கள்.

இலங்கை எமது நாடு. நாம் இந் நாட்டின் பிரஜைகள். இனம் கடந்து மதம் தாண்டி இம் மண்ணின் மக்கள் என்ற வகையில் நாம் அனைவரும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறோமல்லவா? அதனை கொண்டாடும் நாம் எமது முன்னோர்கள் எப்படி இனம், மதம் தாண்டி சுதந்திரக் காற்றை சுவாசிக்கப் போராடினார்கள் என்பதையும் அறிவோம். அவர்களது ஒரே கோஷம் வெள்ளையனே வெளியேறு என்பதாகத்தான் இருந்தது. இப்படி அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்தது எது? 'நாட்டுப்பற்று.' சுதந்திரம் பெற்ற பூமிகளில் நாட்டுப்பற்று என்றும் பசுமையாகவே இருக்கும். ஏனெனில் அதற்கு அவர்கள் அதிக விலை கொடுத்திருக்கிறார்கள்.

பெப்ரவரி 04 நாம் சுதந்திரக் காற்றை சுவாசித்த நாள். அந்த சுந்தரப் பொழுதுகளைத்தான் ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம். நாம் ஒரு தாய் மக்களாக இதயங்களால் இணைகிறோம். எமது மனம் மகிழ்ச்சியால் பொங்குகிறது. நாம் ஒரு சுதந்திர நாட்டின் மக்கள் என்ற உணர்வு புதிதாய் எம்மிடம் பிரவாகிக்கிறது. எம் முன்னோர் சுதந்திரத்திற்காகப் பட்ட துயர் கண் முன்னே படமாகி, நிழலாகி மறைகிறது. சுதந்திர இலங்கையை முன்னேற்றுவதற்கான சுபிட்சமான நம்பிக்கைகள் எமக்குள் தளிர்விடுகின்றன.

நாம் இந்த நாட்டில் பிறந்தோம். இங்கே கல்வி கற்கிறோம். இங்குதான் வாழ்கிறோம். எனவே, இந்த நாட்டின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் நாம் பங்களிக்க வேண்டும். இந்த நாட்டின் அபிவிருத்தியில் எம்மாலான பங்களிப்புகளை நல்க வேண்டும். நாம் இந்த தேசத்தை உள்ளத்தால் நேசிக்க வேண்டும். இந்த தேச உயர்வில் சுதந்திர தேச மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

நாட்டுப்பற்று நமது உள்ளத்தில் நன்றாகப் பதிந்து பசுமையாக இருக்க வேண்டும். நாம் இந்த நாட்டின் மக்கள் என்ற ரீதியில் நாட்டில் பற்றும் அக்கறையும் கொண்டவர்களாகத் திகழ வேண்டும். உள்நாட்டு யுத்தம் எமது நாட்டை அழித்திருந்தது. சிலபோது எமது சுதந்திர உணர்வுகளை அது பாதித்திருக்கலாம். ஆனால், யுத்தத்திற்குப் பின்னரான இப் பொழுதுகள் எமது சுதந்திர உணர்வுகளை தூசு தட்ட வேண்டும். இந் நாட்டு சுதந்திரத்தில் நாமும் பங்காளர்கள் என்ற உரிமை மாத்திரமல்லாமல், இந்த நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளையும் நினைவில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்ன?

- நாட்டுப் பற்றை பறைசாற்றுவது
- நாட்டிற்கு விசுவாசமாக நடப்பது
- நாட்டு நலனில் அக்கறை கொள்வது
- நாட்டு முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் பங்கு கொள்வது

இந் நாட்டிற்குப் பெருமை சேர்க்கக்கூடிய மாணவர்களாக நாம் மாற வேண்டும். இந்த நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது. இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியில் நாம் பங்கெடுக்க வேண்டும். இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நாம் கைகொடுக்க வேண்டும். இந்த நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு நாம் வலு சேர்க்க வேண்டும். இந்த நாட்டின் ஐக்கியத்திற்காக நாம் ஒன்றிணைய வேண்டும். இந்த நாட்டின் சுகாதாரம், மருத்துவம் என்பன மேம்பட நாம் ஒத்துழைக்க வேண்டும். தொழிநுட்ப, விஞ்ஞானத் துறைகளை எமது நாட்டில் முன்னேற்ற வேண்டும்.

இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அனைவரையும் நாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். சுதந்திரம் கிடைத்து 65 ஆண்டு நிறைவை நாம் கொண்டாடுகிறோம். 65 ஆண்டுகளுக்கு முன்னர் அந்நியர் ஆட்சி செய்தபோது இந்த நாடு எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். பிறந்த நாட்டில் சுதந்திரம் இல்லை. அடிமை வாழ்க்கை. உரிமை இல்லை. ஆனால், சுதந்திரம் இந்த நிலையை மாற்றியமைத்தது. பிறந்த மண்ணில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும் உரிமைகளைப் பெறவும் சுதந்திரமாய் வாழவும் வழியமைத்தது.

இந்த நாட்டின் சுதந்திரம் மீண்டும் பறிபோக நாம் இடமளிக்கக்கூடாது. நாட்டை அபிவிருத்தி செய்கின்ற பணிகளில் நாம் கைகோர்க்க வேண்டும். "நான் ஓர் இலங்கையன். எனது நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளில் என்றும் கைகோர்ப்பேன்" என திடசங்கற்பம் பூண வேண்டும்.

சுதந்திர அனுபவங்களைக் கேட்டுப் பாருங்கள்

1948- சுதந்திரம் கிடைத்த ஆண்டு. அக்காலப் பகுதியில் வாழ்ந்த மூத்தவர்களை நீங்கள் சந்தித்தால் அவர்களிடம் சுதந்திரம், சுதந்திரத்திற்கு முன்னரான அனுபவங்களைக் கேட்டுப் பாருங்கள். சுவாரஷ்யமாக இருக்கும். அக்கால நடைமுறைகள், அந்நிய ஆட்சி, காலனித்துவம் என்று நீங்கள் புத்தகத்தில் படிக்கின்ற விடயங்களை அவர்கள் சுவைபட உங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்ற விடயங்கள் உங்களுக்கு புதுவித அனுபவத்தைத் தரும்; சுதந்திரத்தின் பெறுமதியை உணரச் செய்யும். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வரலாறுகளை தேடிப் படியுங்கள்.

மாணவர்களாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?

- இந்நாட்டில் அனைவருடனும் சகோதரத்தவ வாஞ்சையோடு பழக வேண்டும்.
- மொழி, இன, மத பேதமின்றி ஒற்றுமையாக வாழ வேண்டும்.
- இந் நாட்டில் பேதங்களையும் பிரச்சினைகளையும் உண்டுபண்ணுகின்ற சக்திகளுக்கெதிராக அணிதிரள வேண்டும்.
- பாடசாலையில் கற்கின்றபோதும் எமது கல்வி வாழ்க்கையிலும் இந் நாட்டின் நற்பிரஜையாக வாழ முனைவதோடு தேசத்திற்கு பெருமை சேர்க்கப் பாடுபட வேண்டும்.
- ஐக்கியத்தைப் பேணுகின்ற அனைத்து நிகழ்வுகளிலும் பங்களிக்க வேண்டும்.
- ஒற்றுமையே பலம் என்பதையும் நாட்டின் முன்னேற்றமும் அபிவிருத்தியுமே எதிர்காலத் தலைவர்களான உங்களை வளமடையச் செய்யும் என்பதையும் அறிந்துள்ள நீங்கள் அவற்றிற்குப் பங்களிக்க வேண்டும்.
- சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டும்.

சுதந்திரத்தைக் கொண்டாடும்படியும் நாட்டு நலனில் அக்கறை செலுத்தும்படியும் நாட்டின் முன்னேற்றத்தில் பங்களிக்கும்படியும் மற்றவர்களுக்கு சொல்ல வேண்டியது கற்கின்ற மாணவர்கள் என்ற வகையில் எமக்கு கடமையாகும்.

அனைத்து பேதங்களும் மறந்து எல்லோரும் ஒன்றிணைந்து கொண்டாடுகின்ற ஒரு கொண்டாட்டம்தான் சுதந்திர தினக் கொண்டாட்டம் என்பதை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்.

சுதந்திர தினத்தை இம் முறையும் நாம் கொண்டாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வேப்பங்காய் அல்ல!

றஷீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

இலங்கைத் தீவின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் உங்களுக்கு மிகவும் கஷ்டமான பாடங்கள் எவை என வினவினால் பொதுவாக எல்லோரிடமிருந்தும் வெளிவரும் பதில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்பதாகும். இதில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். இந்தப் பதிலை மாணவர்கள் கூறுவதற்குப் பல காரணங்களும் உள்ளன.

1. மாணவர்களின் பன்முக நுண்ணறிவு
2. உயிரியல் விஞ்ஞானக் காரணிகள்
3. உளவியல் காரணிகள்
4. பிரமை
5. நீண்ட காலமாக மூத்தோரிடமிருந்து கடத்தப்படும் போலியான நம்பிக்கைகள்
6. பாடத்திட்ட அமைப்பில் உள்ள குறைபாடுகள்

போன்ற விடயங்களை இதற்கு உதாரணங்களாக முன்வைக்கலாம். ஒருவருக்கு கணிதப் பாடம் கஷ்டமாக அமைவதற்கு மேற்கூறப்பட்ட காரணங்கள் உண்மையில் எந்தளவு பாதிப்புச் செலுத்துகின்றன என்பதையும் அதற்கேற்ப தமது கணித அறிவை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதையும் சற்றுச் சுருக்கமாக நோக்குவோம்.

1. மாணவர்களின் பன்முக நுண்ணறிவு

காட்னரின் 9 வகையான நுண்ணறிவுகள் தொடர்பாகவும் அவை சார்ந்த கற்றல் வழிமுறைகளையும் பற்றி கடந்த இரு இதழ்களிலும் கலந்துரையாடப்பட்டமை ஞாபகமிருக்கும் என நினைக்கிறேன். அதில் மூன்றாவதாக தர்க்கவியல்/கணிதவியல் நுண்ணறிவு (Logical/Mathematical/Inteligence) பற்றியும் அந்நுண்ணறிவுடையவர்களின் பண்புகள் பற்றியும் குறிப்பிடப்பட்டது.

இத்தகைய நுண்ணறிவுள்ள மாணவர்கள் கணிதப் பாடத்தில் சிறந்த ஆர்வத்தைக் காட்டக் கூடியவர்களாக இருப்பர் என்பது உண்மையே. இருப்பினும் இதனது அர்த்தம் ஏனைய மாணவர்களுக்கு கணிதப் பாடத்தைக் கற்பது கஷ்டம் என்பதல்ல. பன்முக நுண்ணறிவை அறிமுகப்படுத்திய காட்னரின் கருத்துப்படி "ஒருவர் பன்முக நுண்ணறிவைக் கொண்டிருப்பார். அதில் ஏதாவது ஒன்றில் அதிக ஆற்றலை வெளிக்காட்டக்கூடியவராக இருப்பார்" என்பதாகும். எனவே, தர்க்கவியல், கணிதவியல் நுண்ணறிவு குறைந்தவர்களிடம் கணிதம் பற்றிய அறிவு இல்லை அல்லது மிகக் குறைவு என்ற முடிவுக்கு வரமுடியாது. உள்ளார்ந்த ரீதியில் அவரிடம் கணித அறிவு காணப்படுகின்றது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. உயிரியல் விஞ்ஞானக் காரணிகள்

மனித மூளையைப் பொதுவாக வலது அரைக் கோளம், இடது அரைக் கோளம் என இரு பகுதிகளாகப் பிரிப்பார்கள்.

இதில் வலது அரைக்கோளம் புத்தாக்கம், உள்ளுணர்வு, குறியீடுகள், உடம்பின் இடது பக்கத்தைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும் அதேவேளை, இடது அரைக்கோளமானது தர்க்கவியல், மொழித் திறன், பகுப்பாய்வு, இலக்கங்கள், எழுத்துக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டவிதிகளுக்கு அமைவாக யோசித்தல், உடம்பின் வலது பக்கத்தைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பாக இருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

இப்பாகுபாட்டுக் கேற்ப மனிதர்களையும் இடதுபக்க மூளை அதிகம் தொழிற்படக்கூடியவர்கள் (Left Brained) என்றும் வலதுபக்க மூளை அதிகம் தொழிற்படக்கூடியவர்கள் (Right Brained) என்றும் வகைப்படுத்துகின்றனர். இதில் இடது பக்க மூளை அதிகம் தொழிற்படக்கூடியவர்கள் கணிதப் பாடத்தில் அதிக ஆர்வமுடையவர்களாக, திறமைகளை வெளிக்காட்டக்கூடியவர்களாக இருப்பர் எனவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஆனால், இவ்வாறு மனிதர்களை வகைப்படுத்துவது பிழையானது எனவும் ஒரு கருத்து நிலவுகிறது. இவ்வகைப்படுத்தலை சரி என ஏற்றுக் கொண்டாலும் ஒருவர் முயற்சி செய்தால் இரு பக்க மூளையையும் சமமாகப் பயன்படுத்த முடியும் என ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. அவர்களே ஜீனியஸ் என அழைக்கப்படுகின்றனர்.

3. உளவியல் காரணிகள்

கணிதம் தொடர்பில் மாணவர்களுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள ஒருவித தாழ்வு மனப்பாங்கு மற்றும் காரணமற்ற சிந்தனைகள் (Irrational thoughts) கணிதப் பாடத்தில் மாணவர்கள் பின்னடைவதற்கு காரணமாகின்றன. "எனக்கு கணிதம் வராது, நான் கணிதத்தில் வீக்" போன்ற யோசனைகள் ஒருவரை உளவியல் ரீதியாகப் பலவீனமாக்கப் போதுமாகும்.

4. பிரமை

கணிதம் கஷ்டமானது, குறிப்பிட்ட சிலரால் மாத்திரம்தான் அதில் திறமை காட்ட முடியும் என்ற வகையிலான பிரமைகள் மாணவர்கள் மத்தியில் பரவியிருக்கின்றமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

5. நீண்ட காலமாக மூத்தோரிடமிருந்து கடத்தப்படும் போலியான நம்பிக்கைகள்

கணிதம் கஷ்டமானது என்ற சிந்தனை மேல் வகுப்பு மாணவர்களினால் கீழ் வகுப்பு மாணவர்களுக்கு கடத்தப்படுகின்றது. இதனால், கணிதப் பாடத்தில் ஓரளவு இயலுமான மாணவர்கள்கூட உளவியல் ரீதியிலான தாக்கத்திற்குட்பட்டு கணிதப் பாடத்தைக் கஷ்டமானதாக்கிக் கொள்கின்றனர்.

6. பாடத்திட்டத்தின் அமைப்பில் உள்ள குறைபாடுகள்

பாடத்திட்டத்தின் பரப்பு கூடுதலாக இருக்கும் போது மாணவர்களுக்கு கணிதம் சுமையாக மாறி பாடத்தைக் கற்பது கஷ்டமானதாக மாறுகின்றது. மாணவர்கள் குறைவான புள்ளிகளைப் பெறுவதற்கு இது காரணமாக அமைகிறது.



இது தவிர ஆசிரியர்களின் கற்பித்தல் முறையும் சிலவேளை கணிதப் பாடத்தைக் கஷ்டமானதாகக் காட்டலாம். இதனாலும் கூட மாணவர்களின் பெறுபேறுகள் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

இருப்பினும் தற்போது பாடத்திட்டப் பரப்பு குறைக்கப்பட்டு சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் 2011ஆம் ஆண்டு கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களின் வீதம் 2010ஆம் ஆண்டைவிட அதிகரித்துள்ளமையை இவ்வட்டவணையில் அவதானிக்க முடியும்.

எனவே, ஒவ்வொரு வருடமும் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுள் சுமார் 50% மாணவர்கள் சித்திபெறத் தவறுகின்றார்கள். இதற்கு மேலே சொல்லப்படுகின்ற காரணங்களை முழுமையாகக் கூறமுடியாது.

பிரமைகளையும் போலியான நம்பிக்கைகளையும் களைந்து மாணவர்களாகிய நீங்கள் முயற்சிப்பீர்களாயின் கணிதப் பாடத்தில் சித்தியடையும் வீதத்தை அதிகரிக்க முடியும். ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய கணித அறிவை விருத்தி செய்து கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித அறிவை விருத்தி செய்வதற்கு என்ன செய்யலாம்?

கணித அறிவை விருத்தி செய்வதற்கு எல்லோராலும் மேற்கொள்ள முடியுமான சில விடயங்களை இங்கு நோக்குவோம்.

1. கடுமையான முயற்சி

எந்தவொரு கஷ்டமான காரியத்தையும் தொடர் முயற்சியால் இலகுவாக்கிக் கொள்ள முடியும் என்பது நாம் அறிந்த உண்மை. இது தொடர்பாக பழமொழிகளும் பல நடைமுறை உதாரணங்களும் காணப்படுகின்றன.

நடைமுறை உதாரணமாக, நெப்போலிய மன்னனின் வரலாற்றைக் குறிப்பிடலாம். அவர் ஒரு நாட்டைக் கைப்பற்றுவதற்காக 13 முறை படையெடுத்து 13 தடவைகளும் தோற்றுப் போனார். இந்நிலையில் ஒரு நாள் சிலந்தியொன்று சுமார் 13 தடவைகள் மரத்தின் ஒரு தண்டிலிருந்து மற்றுமொரு தண்டுக்கு தனது வலையைப் பின்ன முயற்சித்து தோல்வியடைந்து 14ஆவது தடவை தனது முயற்சியில் வெற்றி பெற்றதாம். இதைப் பார்த்த நெப்போலியன் 14ஆவது தடவையும் முயற்சி செய்தார். அதில் வெற்றியும் பெற்றார்.

தோமஸ் அல்வா எடிசனின் உதாரணமும் இங்கு பொருத்தம் என நினைக்கிறேன். அவரை அவருடைய ஆசிரியர் இவருக்குப் படிப்பு வராது என்று வீட்டுக்கு அனுப்பிவிட்டார். ஆனால், அவருடைய அவரை வீட்டில் படிக்கவைத்தார். இவ்வாறு வளர்ந்த எடிஸன் பிற்காலத்தில் மின்குமிழைக் கண்டுபிடிக்க 999 தடவைகள் முயற்சி செய்து தோல்வி கண்டார். ஆனால், தொடர் முயற்சியின் பயனாக 1000மாவது தடவை வெற்றி பெற்றார். ஒரிரு முயற்சியில் கைவிட்டிருந்தால் அவரை இன்று உலகம் நினைத்துக்கூட பார்த்திருக்குமா?

எனவே, கணிதம் கசப்பானது என்று எம்முள் முடிவு செய்து ஒதுங்கிப்போனால் வாழ்க்கையின் நிறைய விடயங்கள் எமக்குக் கஷ்டமாக அமைந்துவிடும். இன்று கௌரவம் மற்றும் அதிக வருமானங்கள் ஈட்டக்கூடிய துறைகளாகக் கூறப்படுகின்ற பொறியியல், வணிக முகாமைத்துவம் (Business Management), வணிக நிர்வாகம் (Business Administration), மற்றும் தகவல் தொழிநுட்பம் (IT) என்பவற்றில் நாமும் தடம்பதிக்க வேண்டுமென்றால் கணிதம் அவசியம். எனவே, நாமும் முயற்சிக்கத் தவறக்கூடாது.

பழமொழிகளுக்கு உதாரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- எறும்பூரக் கற்குழியும்
- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
- முயற்சி திருவினையாக்கும்

2. பெருக்கல் வாய்ப்பாடுகளை மனனம் செய்ய வேண்டும்

ஒருவருக்கு 2ஆம் வாய்ப்பாடு முதல் 15ஆம் வாய்ப்பாடு வரை மனனம் எனில், அவரால் கணிதப் பயிற்சிகளை இலகுவாகச் செய்ய முடியுமாக இருக்கும். இதனோடு சேர்த்து 1, 3, 4, 7 போன்ற இலக்கங்களுக்கான மடக்கைப் பெறுமானங்களையும் மனனம் செய்யலாம். இது போல சில தேற்றங்கள் மற்றும் கேத்திர கணித சூத்திரங்களையும் மனனம் செய்யலாம். கணிதப் பாடத்தைப் பொறுத்தவரை மனனம் செய்வதற்கான ஒரே வழி அதிகம் பயிற்சி செய்வதே.

3. அதிகம் பயிற்சி செய்ய வேண்டும்

கணிதப் பாடத்தைப் பொறுத்தவரை அதிகமாகப் பயிற்சி செய்ய வேண்டும். வகுப்பறையில் ஆசிரியர் உதாரணக் கணக்குகளை விளங்கப் படுத்துவார்கள். அதை நன்கு அவதானித்து வீட்டுக்கு வந்ததும் அந்த அலகில் உள்ள ஏனைய பயிற்சிகளைச் செய்ய வேண்டும். சில மாணவர்கள் வீட்டுப் பயிற்சி (Home Work) கொடுத்தால் மாத்திரம்தான் வீட்டில் கணிதப் பாடத்துக்குரிய பயிற்சிகளை மேற்கொள்வார்கள். உண்மையில் கணிதப் பாடத்தில் அதிகூடிய சித்தி பெற வேண்டும் என ஆசைப்படும் ஒருவர் வீட்டுப் பயிற்சி இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி குறிப்பிட்ட அலகில் உள்ள கணக்குகளைச் செய்து பார்ப்பது அவசியமாகும்.

பயிற்சிகளைச் செய்யும்போது தெரிந்த இலகுவான கணக்குகளை முதலில் ஆரம்பிக்க வேண்டும். பின் படிப்படியாக கடினமான கணக்குகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும். அப்போது கணிதப் பாடத்தில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகரிக்கும்.

கணக்குப் பயிற்சிகளைச் செய்து பார்க்க கழிவுப் பத்திரிகைத் தாள்களைப் பயன்படுத்தலாம். அதாவது அச்சிடப்படாத பத்திரிகைத் தாள்களை கடையில் வாங்கி அதை எங்களுக்குத் தேவையான அளவுகளில் வெட்டி அதில் கணக்குகளைச் செய்து பார்க்கலாம்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

பகுதி III வினா-விடை

கல்வியே அழியாச் செல்வம்

01. முற்காலத்தில் சிறந்து விளங்கிய பெண்கள் மூவரைக் குறிப்பிடுக.

i ஔவையார்

ii பூதப்பாண்டியன் பெருந்தேவியார்

iii மங்கையர்க்கரசியார்

iv காரைக்கால் அம்மையார் (எவரேனும் மூவரை எழுதலாம்)

02. "பெருந்தடங்கட்..." என்று தொடரும் பாடலை எழுதி அப்பாடல் மூலம் கம்பர் உணர்த்தும் விடயம் யாதென விளக்குக.

பெருந்தடங்கட் பிறை நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே

இப்பாடல் மூலம் கம்பர் முற்காலத்தில் பெண்கள் கல்வியறிவு நன்கு பெற்றிருந்ததை வலியுறுத்துவதாக, 'கல்வியே அழியாச் செல்வம்' கட்டுரையாசிரியர் மறைமலை அடிகளார் சான்று பகர்கிறார்.

மிகப்பெரிய கண்களையுடைய பிறைச் சந்திரன் போன்ற நெற்றியைக் கொண்ட மகளிர்க்கெல்லாம் நிலைபெற்ற செல்வமும் கல்வியறிவும் உண்டாயிருந்தலால் வறுமையால் வருத்தமடைந்து வந்தவர்க்கு அவர் வேண்டியவற்றைக் கொடுத்தலும் வந்த விருந்தினரை உபசரித்தலும் அல்லாமல் தினந்தோறும் அம்மகளிரிடத்து நேர்கின்ற செயல்கள் எவை? இவை தவிர, வேறு எதுவும் இல்லையென கவிச் சக்கரவர்த்தி கம்பர் கூறுகிறார்.

அயோத்தி மாநகரில் வாழ்ந்த பெண்கள் கல்வியில் சிறந்தவர்கள் என்பதை 'பெருந்தடங்கட்...' என்று தொடரும் பாடலில் சிறப்பாகக் காட்டியுள்ளார். விருந்தினரை உபசரித்தல், ஈகைப் பண்பு ஆகிய செயல்களுக்கு கல்வியறிவு இன்றியமையாததாகும். எனவே, இவற்றை சிறப்பாக இப்பெண்கள் செய்வதாக எடுத்துக்காட்டி இவர்களது கல்வியறிவை இனங்காட்டுகிறார் கம்பர்.

முத்தொள்ளாயிரம் வினா-விடை

01. முத்தொள்ளாயிரம் என இந்நூலுக்கு பெயர் வரக் காரணம் யாது?

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீரத்தையும் பெருமைகளையும் பறைசாற்றி ஒவ்வொருவரையும் குறித்துத் தொள்ளாயிரம் பாடல்களைப் புலவர் பாடியமையால் முத்தொள்ளாயிரம் எனப் பெயர் வரலாயிற்று.

02. முத்தொள்ளாயிரம் பாடல்களில் யானைப் படையின் போர்த்திறம் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் யானைப் படையின் போர்த்திறனை அழகுற எடுத்துரைப்பதைக் காண்கிறோம். அதற்கு, 'வீறுசார் மன்னர்...' என்று தொடங்கும் பாடலும் "கச்சி ஒரு கால்..." என்று தொடரும் பாடலும் "மருப்பூசியாக..." என்று தொடரும் பாடலும் எடுத்துக்காட்டுகளாகும்.

சேரனின் யானைப் படையின் போர்த்திறத்தை 'வீறுசார் மன்னர்' என்ற பாடலில் காணலாம். குற்றம் செய்த பகைவனைக் கண்டால் இயல்பாக சிவக்கும் கண்களையுடைய சேரனின் யானையானது பகைவரின் வெண்கொற்றக் குடையை நொறுங்கும்படியாக எறிந்து பகல் முழுவதும் போர் செய்தது. அதனால்தான் முழு நிலவை மாற்றார் குடை எனக் கருதி வானத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கித் தன் தும்பிக்கையை நீட்டுவதாகக் காட்டப்படுகிறது.

உறையூருக்கு மன்னனான சோழ மன்னனுடைய ஆண் யானையானது காஞ்சிபுரத்தில் ஒரு காலை வைத்து மிதிக்கும். மற்றொரு காலால் வடக்கே நீர் வளமிக்க உச்சையினி நகரத்தை மிதிக்கும். பின்னர் தெற்கே ஈழத்தில் ஒரு காலை வைத்து மிதிக்கும். இப்படியாக ஒரே வேகத்தோடு தாவிப் போர் புரிந்து வரும் என்பதன் மூலம் யானைப் படையின் போர்த்திறம் காட்டப்படுகிறது.

மேலும், பாண்டிய மன்னனது யானைப் படையின் வலிமையை "மருப்பூசியாக..." என்று தொடரும் பாடலுணர்த்துகிறது. போருக்குரிய ஆண் யானையானது தனது கொம்புகளை எழுத்தாணியாகக் கொண்டு பகையரசர்களின் மார்பை ஓலையாகக் கொண்டு இந்த உலகம் பாண்டிய மன்னனுக் குரியது என பட்டயம் தீட்டுவதாகக் காட்டி யானைப் படையின் வலிமையை புலப்படுத்தி நிற்பதை எடுத்துக்காட்டலாம்.

இவ்வாறே முத்தொள்ளாயிரம் பாடல்களில் யானைப் படைகளின் வலிமை எடுத்துக் காட்டப்படுகிறது.

குறிப்பு: வினாத் தொகுப்பு விடைகள் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...

திட்டம் அடுத்த கட்ட... (21ஆம் பக்கத் தொடர்)

5. திட்டம் சிகரம் தொட தீரமிக்க துணிச்சல்

தீர்க்கமாக திட்டமிட்டதை திட உறுதியோடு எவ்வளவு துணிச்சலாக செயற்படுத்துகின்றீர்கள் என்பது மிக முக்கியம். உங்கள் துணிச்சலுக்கு ஏற்பவே வெற்றி கிட்டும். சிறந்த முடிவுகள் துணிச்சலாக எடுக்கப் பட்டதால்தான் பல்வேறு வெற்றியாளர்கள், வெற்றி நிறுவனங்களின் வெற்றிகள் சாத்தியமாயின. தவறினால் தோல்வி மட்டுமல்ல, முழுமையான இழப்பு, மரணம் என்ற நிலைமையிலும்கூட துணிச்சலாக முடிவுகள் நம்பிக்கையோடு எடுக்கப்பட்டதால்தான் சாம்ராஜ்யங்கள் கைப்பற்றப்பட்டன. தாரிக் பின் ஸியாத் ஸ்பெய்னைக் கைப் பற்றியது இதற்கு சிறந்த உதாரணம். கப்பல்களை எரிக்கும் முடிவை துணிச்சலாக எடுத்ததால்தான் சாம்ராஜ்யமே சரணடைந்தது. 1776 ஜூலை 4 இல் பிலடெல்பியாவில் எடுக்கப்பட்ட மகத்தான முடிவுதான் அமெரிக்கா இன்று சுவாசித்துக் கொண்டிருக்கும் சுதந்திரக் காற்று.

புதுசு தரும் உற்சாகத்தில் செயற்பட ஆரம்பித்த நீங்கள் அந்த உற்சாகம் இழக்கப்பட முன்னரே அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துவிட வேண்டும். அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு மேலே நாம் குறிப்பிட்ட அம்சங்களை மனதில் பதித்துக் கொள்ளுங்கள். இவற்றை நீங்கள் செயற்படுத்தினால் வெற்றிப் படிகளில் பயணிக்கலாம், இன்ஷா அல்லாஹ்.

விஞ்ஞானம்... (34ஆம் பக்கத் தொடர்)

மின்காந்த தூண்டல் தொடர்பான விதிகள்

பரடேயின் விதி:-

தூண்டல் மின்னியக்க விசை கடத்தியில் ஏற்படும் காந்தப்பாய மாற்ற வீதத்திற்கு நேர்விகித சமனாகும்.

லென்சின் விதி:-

தூண்டல் மின்னோட்டத் திசையானது அதனை ஏற்படுத்தும் மாற்றத்தை எதிர்க்கும் திசையில் காணப்படும்.

பிளெமிங்கின் விதிகள்

பிளெமிங்கின் இடக்கை விதி:- (இயக்க திசை) (மோட்டார்)

இடது கையின் முதல் மூன்று விரல்களையும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக பிடிக்க சுட்டு விரல் காந்தப்புலத் திசையையும் நடுவிரல் மின்னோட்டத் திசையையும் குறித்தால் பெருவிரல் கடத்தியின் இயக்கத் திசையைக் குறிக்கும்.

பிளெமிங்கின் வலக்கை வழி:- (தூண்டல் ஓட்டம்) (தைனமோ)

வலது கையின் முதல் மூன்று விரல்களையும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக வைத்து சுட்டு விரல் காந்தப்புலத் திசையையும் பெருவிரல் கடத்தி இயங்கும் திசையையும் குறித்தால் நடுவிரல் தூண்டப்படும் மின்னோட்டத் திசைகளைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி Aயில் எவையேனும் 5 வினாக்களுக்கும் பகுதி Bயில் 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

- ஒவ்வொரு வினாவின் சரியான விடைகளுக்கு 10 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் மொத்தமாக வழங்கப்படும்.
- r ஆரையும் h உயரமும் உடைய உருளையின் கனவளவு $\pi r^2 h$

பகுதி A

01.

a)

வரிவிலக்குத் தொகை	– 300,000/=
முதல் 200,000இற்கு	– 5%வரி
அடுத்த 300,000இற்கு	– 7% வரி
மேலதிக தொகை	– 10% வரி

i. ஒருவரின் வருமானம் ரூ. 950,000 எனின் 200,000 இற்கு வரி யாது?

ii. அவர் எத்தனை ரூபாவிற்கு 10% வரி செலுத்த வேண்டும்?

iii. செலுத்திய மொத்த வரித்தொகை யாது?

iv. ஒருவரின் வருட வருமானம் ரூ. a எனின் (a<500,000) வரித்தொகையை a சார்பில் தருக.

b) உருவில் ABCD ஓர் இணைகரம். $\hat{ADF} = \hat{FDE} = \hat{EDC} = x$, $\hat{ABC} = 81^0$ எனின், தரவுகளைப் பயன்படுத்தி i. X, ii. Y, iii. Z என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.



02. சார்பு $y = x^2 - 5$ இன் வரைபை வரைவதற்கு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

x	-3	-2	-1	0	1	2	3
Y	4	.....	-4	-5	-4	-1	4

a)

i. x, y அச்சு வழியே 10 சிறு பிரிவுகளை ஓர் அலகாகக் கொண்டு வரைபை வரைக.

ii. $x = -2$ ஆகும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.

b) உமது வரைபிலிருந்து

i. சார்பின் இழிவுப் பெறுமானம் யாது?

ii. சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க.

iii. திரும்பற் புள்ளியின் ஆள்கூற்றைத் தருக.

iv. சார்பு மறையாகும் x இன் பெறுமான வீச்சு யாது?

v. $x = \sqrt{5}$ ஆகும்போது சார்பு பூச்சியமாகுமெனின், $\sqrt{5}$ இன் பெறுமானத்தைக் காண்க.

03.

i. அடைப்புக்குறி நீக்கிச் சுருக்குக. $3(x-1) - 2x$

ii. பொ.ம.சி. காண்க. $a^2x, x^2(a+x)$

iii. சுருக்குக. $\frac{(2k+1)}{3} - \frac{k}{5}$

iv. மாமாவின் வயது மருமகனின் வயதில் 3 மடங்காகும். 5 வருடங்களின் பின்னர் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 70 வருடங்களாகும் எனின்,

v. மருமகனின் வயதை x எனக் கொண்டு மாமாவின் வயதை x இல் தருக.

vi. மாமாவின் வயதைக் கணிக்க.

04.



a) 1: 20,000 என்ற அளவிடைக்கு வரையப்பட்ட காணி ஒன்றின் கிடைப்படம் உருவில் தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. அளவிடைப் படத்தின் பரப்பு யாது?

ii. காணியின் உண்மை நீளம் யாது?

iii. காணியின் உண்மைப் பரப்பைக் காண்க.

b) நிலைக்குத்து சுவரொன்றில் சாத்திவைக்கப் பட்டுள்ள கோல் ஒன்றின் வரைபடம் தரப் பட்டுள்ளது. கோலானது தரை, சுவரை தொடுமிடங்கள் A, C ஆகும்.

i. BC இன் உயரம் யாது?

ii. கோலின் நீளம் யாது?



05.

i. $a^2 = 3125$ எனின் a இன் பெறுமானத்தைக் காண்க.

ii. $\lg_2 32 + g_2 4 - \lg_2 16$ இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையை பயன்படுத்தாமல் காண்க.

iii. $v = \pi r^2 h$ எனின் $\pi = 3.142$, $r = 15.7cm$, $h = 30cm$ எனின் பரப்பு v இன் பெறுமானத்தைக் காண்க.

06. தொழிற்சாலை ஒன்றில் பயன்படுத்திய பின்னர் எஞ்சிய கம்பித்துண்டுகளின் நீளங்கள், cm இல் தரப்பட்டுள்ளன.

நீளம் cm	ந.பெ. (X)	மீடிறன் (f)	fx
40 - 48		10	
48 - 56		15	
56 - 64		25	
64 - 72		32	
72 - 78		20	
80 - 88		14	
		ξf=	ξfx=

i. ஆகக் குறைந்த நீளத்தைக் கொண்ட கம்பியின் நீளம் யாது?

ii. ஆகார வகுப்பு யாது?

iii. கம்பியின் இடை நீளம் யாது?

iv. 56cm இலும் குறைந்த நீளமுடைய கம்பிகள் முழுவதன் என்ன சதவீதம்?

v. 100cm நீள அளவுள்ள கம்பியின் நிறை 500g எனின் மொத்தக் கம்பிகளின் நிறையினைக் காண்க.

பகுதி B

07. வீட்டுத் தோட்டமொன்றில் நடப்படுகின்ற பூக்களின் ஒழுங்கமைப்பு உருவில் தரப்பட்டுள்ளது.

X X X X X X X X

X X X X X

X X

i. தரப்பட்டுள்ள கன்றுகளை தொடராக எழுதுக.

ii. 8வது நிரையில் காணப்படும் பூக்கன்றுகளின் எண்ணிக்கை யாதாக இருக்கும்?

iii. nவது நிரையில் காணப்படும் பூக்களின் எண்ணிக்கையை n இல் தருக.

iv. எத்தனையாவது நிலையில் 41 பூக்கன்றுகள் காணப்படும்.

v. முதல் 14 நிரையிலுள்ள மொத்த கன்றுகளின் எண்ணிக்கை யாது?

08.

i. AB=8cm, BC=6cm, AC=10cm ஆகவுள்ள ΔABC யைக் காண்க.

ii. அதில் கோணம் $A\hat{B}C$ இன் பெறுமானத்தை அளந்து எழுதுக.

iii. A,B இலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கினை வரைக.

iv. அது AC யை வெட்டும் புள்ளியை X எனவும் AB யை வெட்டும் புள்ளியை Y எனவும் குறிக்க.

v. X ஐ மையமாகவும் BX யை ஆரையாகவும் கொண்ட வட்டமொன்றை வரைக. அதன் ஆரையை அளந்து எழுதுக.

vi. நாற்பக்கல் BCXY பரப்பளவு யாது?

09.

a) அடியின் உள்விட்டம் 8a உம் 60cm உயரமும் உடைய உருளை வடிவ பாத்திரம் ஒன்றின் 1/2 பகுதியிற்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. நீரின் கனவளவை $480\pi a^2$ எனக் காட்டுக.

ii. a=14cm எனின் உருளையின் கனவளவு யாது?

b) உருவில் உள்ள தரவுகளை அவதானித்து

i. $A\hat{B}C$ இன் பெறுமானம் யாது?

ii. $A\hat{D}B$ இற்கு சமமான கோணம் யாது?

iii. $D\hat{C}A$ இற்கு சமமான கோணம் யாது?



iv. $C\hat{A}B$ இன் பெறுமானம் 43^0 எனின் $A\hat{D}B$ இன் பெறுமானம் யாது?

10.



a) ஒரு கிராமத்தில் க.பொ.த. (உ/த) எழுதிய மாணவர்களில் 42 பேர் உயர்தரத்திற்கு சித்தியடைந்தனர். இவர்களுள் 30 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள். ஏனையோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகும்.

ξ = {உயர்தரத்தில் சித்தியடைந்தோர்}

i. பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் எத்தனை பேர்?

ii. பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்கள் 10 பேர் எனின், பல்கலைக்கழக அனுமதி கிடைத்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எத்தனை பேர்?

iii. நிழற்றப்பட்ட பிரதேசத்தை விபரிக்குக.

iv. ஒருவர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டால் அவர் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

b) மேற்குறித்த வென்னுருவில் காட்டப்பட்டுள்ள தரவுகளை அட்டவணையில் குறிக்க.

	அனுமதி கிடைத்தவர்கள்	அனுமதி கிடைக்காதவர்கள்
பாடசாலைப் பரீட்சார்த்திகள்		
தனிப்பட்ட பரீட்சார்த்திகள்		

12.



a) இணைகரம் ABCD யில் $A\hat{D}F = C\hat{D}F$ ஆகவும் $C\hat{D}F = E\hat{A}F$ ஆகவும் இருப்பின்

i. $A\hat{F}D$ இற்கு சமமான கோணமொன்றைப் பெயரிடுக.

ii. $A\hat{F}D = E\hat{A}F$ எனவும்

iii. நாற்பக்கல் AEFD ஓர் இணைகரம் எனவும் காட்டுக.

iv. $A\hat{E}F$ இற்கு சமமான கோணமொன்றைத் தருக.

b) இரண்டு புத்தகசாலைகளின் விளம்பரங்கள் தரப்பட்டுள்ளன.

எந்த ஒரு புத்தகத்தினதும் விலை ரூபாய் 350 மட்டுமே குமார் புத்தக நிலையம்

ஒவ்வொரு புத்தகத்திற்கும் 15% கழிவு வழங்கப்படும் கண்டி புத்தக நிலையம்

i. கண்டி புத்தக நிலையத்தில் ரூபா 100 பெறுமதியான புத்தகத்திற்கு கழிவுத்தொகை யாது?

ii. ரூபா 400 பெறுமதியான புத்தகத்தை குமார் புத்தக நிலையத்தில் வாங்குவதால் கிடைக்கும் கழிவு யாது?

iii. இதே புத்தகத்தை கண்டி புத்தக நிலையத்தில் வாங்கினால் செலுத்த வேண்டிய தொகை யாது? எதில் பெறுவது அனுகூலமானது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு

விஞ்ஞானம்



தரம் 10 உயிரியல் | **ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்**

அங்கிகளின் உடலின் ஒழுங்கமைப்பு மட்டங்கள்

- அங்கிகளின் அடிப்படைக் கட்டமைப்பலகு கலம் ஆகும்.
- கலங்களைப் பற்றி ஆராய்ந்த ஷெல்டன், சுவான் ஆகியோர் கலக்கொள்கையை முன்வைத்தனர். அது பின்வருமாறு:
  - ⇨ 'அங்கிகளின் கட்டமைப்பினதும் தொழிற்பாட்டினதும் அடிப்படை அலகு கலம் ஆகும்.'
- ஒளி நுணுக்குக் காட்டி ஊடாக கலங்களின் கலச்சுவர், பச்சையுருணிகள், புன்வெற்றிடம், கல முதலுரு என்பனவற்றைக் காண முடியும்.
- கலத்தை மேலும் பெரிதாக்கிப் பார்க்க இலத்திரன் நுணுக்குக்காட்டி உதவுகிறது. இதன் மூலம் ஏனைய கலப்பகுதிகளான கரு, இழைமணி, கொல்கி உபகரணம், அகமுதலுரு வலையமைப்பு ஏனைய சிறு கட்டமைப்புகள் யாவற்றையும் கண்டறியலாம்.

01. *கலத்தினுள் காணப்படும் சில புன்னங்கங்களின் தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளன. அதற்குரிய புன்னங்கத்தை இனங்கண்டு எழுதுக.*

i. *கலத்தின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் மையம்:*

ii. *சக்தி வெளியிடப்படும் (கலச்சுவாசம்) மையம்:*

iii. *புரதத் தொகுப்பை மேற்கொள்ளல்:*

iv. *பதார்த்தங்களின் சுரத்தல், கடத்தலை மேற்கொள்ளல்:*

v. *கடத்தற் செயற்பாடுகளை மேற்கொள்ளும் தொகுதி:*

02. *தாவரக்கலம் விலங்குக் கலத்திலிருந்து வேறுபடும் வகையில் அது கொண்டிருக்கும் 3 சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.*

இழையம் (Tissue)

➢ தோற்றம், அமைப்பு என்பவற்றில் ஒத்திருப்பதுடன் குறித்த தொழிலையோ அல்லது பல தொழில்களையோ நிறைவேற்றுவதற்காக சிறத்தலடைந்த கலங்களின் கூட்டம் இழையம் எனப்படும்.

03. *தாவரங்களில் காணப்படும் இழையங்களின் வகைகளைப் பின்வரும் உரு காட்டுகிறது.*

- தாவர இழையம்
  - பிரியிழையம்
  - நிலையிழையம்
    - எளிய நிலையிழையம்
    - சிக்கலான நிலையிழையம்

i. *பிரியிழையங்களின் 2 இயல்புகளைக் குறிப்பிடுக.*

ii. *தாவரங்களில் காணப்படும் பிரியிழைய வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.*

iii. *தாவர இலையொன்றில் காணப்படும் நிலையிழையங்கள் அதன் குறுக்குவெட்டு முகத்தோற்றத்தில் தென்படும் விதத்தைப் பின்வரும் உரு காட்டுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. A, B எனும் பகுதிகள் குறிக்கும் நிலையிழையம் எது?
2. இழையம் B இன் தொழிற்பாடு யாது?
3. இழையங்கள் C, D என்பவற்றின் தொழிற்பாடுகள் எவை?
4. இவற்றில் பொறிமுறை வலுவை ஏற்படுத்தும் பிரதான இழையத்தைக் குறிக்கும் எழுத்து யாது?

04: தசை வகைகளின் இயல்புகள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இதற்குப் பொருத்தமான தசை வகையை எழுதுக.

இயல்புகள்	தசை வகை
கலங்கள் வரிகொண்ட நார்களாகக் காணப்படும். நார்கள் தனித்தனியானவை; இச்சை வழி செயற்பாடுகளை ஆளும்.	
சுவாலையுருவான தனிக்கலங்களால் ஆனவை. வரிகள் காணப்படுவதில்லை. இச்சையின்றிய செயற்பாடுகளை ஆளும்.	
கலங்கள் வரிகொண்ட நார்களாகக் காணப்படும். நார்கள் ஒன்றுடனொன்று இணைந்தவை. இச்சையின்றிய செயற்பாடுகளை ஆளும்.	

ii. மனித உடலில் பின்வரும் இடங்களில் காணப்படும் தசை வகையை எழுதுக.

1. குடல், இரைப்பை ....
2. நாக்கு ....
3. இதயம் ....
4. சிறுநீர்ப்பை ....

05: குருதி இழையத்திலுள்ள கலக்கூறுகளைப் பின்வரும் உருக்கள் குறிக்கின்றன.



A B C

1. A, B, C ஆகிய கலக்கூறுகளைப் பெயரிடுக.
2. இவற்றில் குறித்த வடிவத்தைக் கொண்டிராதவை எவை?
3. இவற்றில் கருவைக் கொண்டிராதவை எவை?
4. சிறுமணிகளைக் கொண்டிருக்கும் கல வகை எது?
5. A, B, C என்பவற்றினால் ஆற்றப்படும் தொழிற்பாடுகளை எழுதுக.

மேலணி இழையம்

➢ விலங்குகளின் உட்புற, வெளிப்புற மேற்பரப்புகள் யாவற்றையும் போர்த்திக் காணப்படும் இழையம் மேலணி இழையம் ஆகும். இதற்கு நேரடியான குருதி விநியோகம் இல்லை. பரவல் மூலமாகவே பதார்த்தங்கள் சென்றடையும்.

மேலணி இழையம், தொழிற்பாடு	காணப்படும் இடம்
1. செதின் மேலணி– பதார்த்தங்களை ஊடு புகவிடல்	i. குருதி மயிர்க்குழாய் சுவர், சுவாசப்பை சிற்றறை போமனின் உறை
2. கன மேலணி– சுரத்தல், அகத்துறிஞ்சல்	ii. தைரொயிட்டுச் சுரப்பி, வியர்வைச் சுரப்பி, ஈரலின் சிறுபகுதிகள்
3. கம்ப மேலணி – சுரத்தல், அகத்துறிஞ்சல்	iii. உணவுக் கால்வாயின் போர்வை (இரைப்பை, குடல்)
4. பிசிர் மேலணி– தூசுப் பதார்த்தங்களை அகற்றுதல்	iv. நாசிக்குழி, சுவாசப்பைக் குழாய்
5. படைகொண்ட மேலணி – உராய்வைத் தாக்குப் பிடித்தல்.	iv. தோல், தொண்டை, வாய்க் குழி

06: அங்கிகளின் உடலின் ஒழுங்கமைப்பு மட்டங்களைக் குறிக்கும் பின்வரும் உருவிலுள்ள x, y என்பவற்றைப் பெயரிடுக.

கலம் → (x) → அங்கம் → (y) → அங்கி

உங்கள் சிந்தனைக்கு

- எமது உடலில் குருதிக் கலங்கள் உற்பத்தியாகின்ற இடம் செவ்வென்பு மச்சையாகும். அவை இறந்த பின் அழிவடைகின்ற இடம் ஈரல், மண்ணீரல் ஆகும்.
- குருதியில் அதிக சவீதத்தில் காணப்படும் கலக்கூறு செங்குழியம், குறைந்த சதவீதத்தில் காணப்படும் கலக்கூறு வெண்குழியம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னோட்டத்தின் விளைவுகள்

- இலங்கையில் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்னானது 230V வோல்ற்றளவும் 50Hz அதிர்வெண்ணும் கொண்ட ஆடலோட்டமாகும்.
- வீடுகளுக்கு வழங்கப்படும் மின் பின்வரும் பல்வேறு துணைச் சாதனங்களினூடாகச் சென்று விளக்கு, குதைகளில் முடிவடையும்.

சேவை உருகி → மின்மானி → தலைமை ஆளி → தடக்கு ஆளி → பரம்பற் பெட்டி

01.

i. வீட்டு மின்சுற்றில் பயன்படும் துணைக்கூறுகளான சேவை உருகி, பிரதான ஆளி, தடக்கு ஆளி என்பவற்றினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளை எழுதுக.

ii. வீட்டு மின்சுற்றில் புவித்தொடுப்பு வடத்தினால் ஆற்றப்படும் தொழிற்பாடு யாது?

iii. வீடொன்றில் 100W மின்குமிழ்கள் ஐந்து தினமொன்றில் 6 மணித்தியால நேரத்திற்கு ஒளிரச் செய்யும்போது செலவாகும் மின்சக்தி அலகுகளைக் காண்க.

iv. மேற்படி 100W மின்குமிழிற்குப் பதிலாக 20W வலுவுடைய சக்திச் சிக்கன மின்குமிழ்கள் ஐந்தை அதேயளவு நேரத்திற்கு ஒளிரச் செய்ய நுகரப்படும் மின் சக்தி அலகுகளைக் காண்க.

v. சக்திச் சிக்கன மின்குமிழைப் பயன்படுத்துவதன் ஓர் அனுகூலத்தையும் பிரதிகூலத்தையும் எழுதுக.

vi. உருகிகளில் பயன்படுத்தப்படும் கலப்புலோகத்தை எழுதி அதன் இரு இயல்புகளையும் எழுதுக?

மின்னின் வெப்ப விளைவு

- வெப்பத்தைப் பிறப்பிக்கும் சாதனங்களில் வெப்பத்தை அதிகளவில் உருவாக்குவதற்காக நிக்ரோ கலப்புலோகம் பயன்படுத்தப்படும். காரணம் இது உயர் தடைத்திறன் கொண்டுள்ளதுடன் உயர் உருகுநிலையையும் கொண்டுள்ளது.

உருவாகும் வெப்ப விளைவு (H) இனைக் காண்பதற்கான சமன்பாடுகள்.

$H=VIt$ $H=I^2Rt$ $H=V^2/R.t$

02: இழை மின்குமிழ்களில் பயன்படுத்தப்படும் தங்குதன் இழைகள் மெல்லியதாகவும் அதிக சுருள்களைக் கொண்டதாகவும் காணப்படுவதன் நன்மை யாது?

03. 500Ω தடையுடைய வெப்பமாக்கும் உலோகம் ஒன்றினூடாக 5A மின்னோட்டம் பாயும் போது 10 செக்கன் நேரத்திற்கு உருவாக்கப்படும் வெப்ப சக்தியின் அளவைக் காண்க. இதன் வலுவைக் காண்க.

04. துவிச்சக்கர வண்டிகளில் பயன்படுத்தக்கூடிய தைனமோ ஒன்றின் நெடுக்கு வெட்டுமுக அமைப்பை பின்வரும் உரு காட்டுகின்றது.



i. தைனமோவிலிருந்து மின்னைப் பிறப்பிக்க யாது செய்ய வேண்டும்?

ii. படத்தில் காட்டப்பட்டுள்ள X, Y, Z எனும் பகுதிகளின் பெயர்களை எழுதுக.

iii. இங்கு உருவாகும் மின்னோட்டம் எத்தகையது என்பதைக் குறிப்பிட்டு கதோட்டுக் கதிர் அலைவு காட்டிக்கு இதன் மின்னோட்டத்தை வழங்க அங்கு தோன்றும் அலை வரைபையும் வரைக.

iv. தைனமோவிலிருந்து வரும் மின்னோட்டத்தை மின்குமிழ் ஒன்றின் சுற்றிற்கு வழங்க மின்குமிழ் ஒளிரும். இங்கு தைனமோவில் மின் உருவாகியது முதல் மின்குமிழ் ஒளிர்வது வரை நடைபெறும் சக்தி மாற்றத்தை அம்புக்குறி மூலம் காட்டுக.

v. மேற்படி மின்குமிழ் ஒளிரும்போது குமிழின் பிரகாசத்தை கூட்டுவதற்கு பயன்படும் செயற்பாடு ஒன்றை எழுதுக.

(30ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வசந்தம் என மொழியப்பட்ட முத்தான மாதத்தில் முஹம்மது நபியவர்கள் பிறந்தார்கள். இவ் உலகில் பிறந்த நபியவர்கள் உலகிற்கு ஒரு செய்தியைச் சொன்னார்கள். மட்டுமல்லாமல், அதற்கு முன்மாதிரியாக வாழ்ந்தும் காட்டினார்கள்.

நபியவர்கள் சொன்ன செய்தி என்ன?

நபியவர்களுக்கு முதலாவது வஹி ஹிரா குகையில் வைத்து இறக்கியருளப்பட்டது. வஹி இறங்கிய பின்னர் அந்த செய்தியை சுமந்து கொண்டு நபியவர்கள் வீட்டிற்கு வருகின்றார்கள். நிகழ்ந்த அனைத்தையும் மனைவி கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் கூறுகின்றார்கள். அதற்கு கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அளித்த பதில் நபியவர்களின் குணாதிசயங்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது.

1. நீங்கள் உறவினர்களுடன் நல்ல முறையில் ஒட்டுறவாக வாழ்கிறீர்கள்.
2. (சிரமப்படுவோரின்) சுமைகளை சுமந்து கொள்கிறீர்கள்.
3. வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள்.
4. விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள்.
5. சோதனைகளில் (சிக்குண்டோருக்கு) உதவி புரிகின்றீர்கள்.

நபியவர்கள் நபித்துவதற்கு பின்னர்-முன்னர் என்ற வேறுபாடின்றி எப்போதுமே உயர்ந்த பண்புகளைப் பெற்றிருந்தார்கள். அதற்கு அன்னாரது மனைவியே சாட்சியாக இருக்கின்றார்கள்.

மக்கா நபியவர்கள் பிறந்த மண். அங்குள்ள பெரும்பாலானோர் நபியவர்களின் உறவினர்கள். ஏனையோர் ஊரார். முதலாவது நபியவர்கள் எந்தவித பாகுபாடுமின்றி உறவினர்கள் என்ற ரீதியில் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டுள்ளார்கள். அது மாத்திரமல்லாது தனது ஊர் மக்களுடனும் நாட்டுப் பிரஜைகளுடனும் எவ்வாறு நட்பாக, அன்பாக, அவர்களின் விடயங்களில் அக்கறை உள்ளவர்களாக, அவர்களுக்கு உதவுபவர்களாக இருந்துள்ளார்கள் என்பதற்கு மேற்சொன்ன வரிகள் சான்றாகும்.

இந்தப் பண்பாட்டைத்தான் முழு உலகமும் வியந்து போற்றுகிறது. இன்று முழு உலகமும் போற்ற முன், நபியவர்களின் எதிரிகளாக இருந்த மக்கள் நபியவர்களின் நம்பிக்கைத் தன்மையிலும் உண்மையிலும் நாணயத்திலும் அமானிதத்திலும் நம்பிக்கையிழக்கவில்லை. அவற்றில் நபியவர்களைக் குறைகூறவில்லை. மாறாக, நபியவர்களின் இறைத்தூதைத்தான் மறுத்தார்கள்.

முஹம்மது ஒரு நபி என்பதை ஏற்க மறுத்த அவர்கள் நபிகளாருக்கு வழங்கிய பட்டம் என்ன தெரியுமா? 'அல் அமீன்' - நம்பிக்கையாளர்: எமது நம்பிக்கையை வென்றவர். உங்களை நாங்கள் நம்புகிறோம் என சாட்சியளித்தனர்.

'அஸ்ஸாதிக்' - உண்மையாளர்: நீங்கள் பொய் பேசியதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. எப்போதும் உண்மைதான் பேசுவீர்கள். உங்களது உண்மைத் தன்மைக்கு நாங்கள் பட்டம் சூட்டுகிறோம்.

அது மாத்திரமல்லாது நபியவர்களின் அமானிதம் பேணுகின்ற தன்மையால் கவரப்பட்டு தமது பொருட்களையெல்லாம் அமானிதமாக பேணிப் பாதுகாக்குமாறு வழங்கி வைத்தார்கள்.

மக்கத்து மக்கள் நபியவர்களைப் புரிந்து வைத்திருந்ததற்கு ஏற்ப நபியவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். எந்தளவுக்கு என்றால் குறைஷிகள் நபியைக் கொல்லத் திட்டம் போட்டு வீட்டை சூழ்ந்திருந்தபோதுகூட நபியவர்களிடம் குறைஷிகளின் அமானிதப் பொருட்கள் ஏராளமாக இருந்தன. "என்னை அழிக்க வந்தவர்களின் அமானிதங்களை என்ன செய்கிறேன் பார்" என்று சொல்லாமல் தான் இங்கிருந்து போனாலும் அவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் விட்டுச் சென்றார்கள்.

இத்தகைய பண்புகள்தான் நபியவர்கள் மீண்டும் மக்காவுக்கு வந்தபோது அவர்களது உள்ளத்தில் நபியவர்களைப் பற்றிய எந்தவிதமான பிழையான பதிவுகளுமின்றி நபியை அவர்களது சகோதரராகப் பார்க்கும் நிலைக்குக் கொண்டுவந்தது. மக்காவுக்கு வெற்றியோடு திரும்பிய நபியவர்கள் அம் மக்களிடம் கேட்டார்கள். "நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" அந்த மக்கள் கூறினர். "நீங்கள் எங்கள் சகோதரன்; எங்கள் சகோதரனின் மகன்."

நபியவர்கள் மற்றவர்களுக்கு எத்தகைய முன்மாதிரிகளைக் காட்டி வாழ்ந்திருக்கிறார்கள், என்ன செய்தியைச் சொன்னார்கள் என்பதை மாணவர்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். முன்மாதிரியைக் காட்டி நபியவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அந்த முன்மாதிரியை நாமும் பின்பற்றி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டுமல்லவா?

அனைவரது மனங்களையும் வென்ற நபியவர்கள்

நபியவர்கள் அக்கால மக்கள் அனைவரினதும் மனங்களை வென்றிருக்கிறார்கள். குறைஷிகள் மக்காவிற்குள் புதிதாக நுழைகின்ற அனைவரிடமும் நபிகளாரைப் பற்றி தவறாகவும் தப்பாகவும் இல்லாத பொல்லாத பலதை இட்டுக் கட்டிக் கூறிவிடுவர். மாத்திரமன்றி முஹம்மதின் பேச்சைக் கேட்காமல் காதுகளில் பஞ்சைப் போட்டுக் கொள்ளுங்கள் என எச்சரிப்பர். வருபவர்களும் அவ்வாறே செயற்படுவர். ஆனால் எதேச்சையாக அவர்கள் நபியவர்களுடன் பேச நேர்ந்தால் அவர்களை அறியாமலேயே நபியவர்கள் மற்றவர்களின் மனதை வென்று விடுவார்கள். மற்றவர்களிடத்தில் நபியவர்கள் காட்டும் பரிவும் பாசமும் அவர்களை ஈர்த்துவிடும்.

இந்த உண்மையாக மனிதநேயத்தின் முன் எத்தனையோ எதிரிகள் சரணாகதி அடைந்து தூய இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். நாமும் எம்மோடு உறவாடுபவர்களுடன் இதமாகப் பழகி அவர்களின் உள்ளங்களை வென்று இஸ்லாம் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை அவர்களது மனதில் பதிக்க சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்வோம்.

நபியவர்கள் தனது நடத்தை மூலம் அவர்களின் மனங்களில் பதிக்கப்பட்ட தவறான மனப்பதிவுகளை களைந்து விடுவார்கள். நபியவர்களுடன் பழகுகின்ற யாருமே நபியவர்களைப் பற்றிய நல்லபிப்பிராயம் மனதில் பதியாமல் செல்வதில்லை. இதனையறிந்த குறைஷிகள், யாருமே நபியவர்களின் பேச்சைக் கேட்கக்கூடாது; நபியவர்களுடன் பழகக் கூடாது என்பதற்கான சதித்திட்டங்களைத் தீட்டினர்.

வீதியில் செல்லும்போது குப்பை கொட்டிய பெண் சுகவீனமுற்றிருந்தபோது அவளை சந்தித்து சுகம் விசாரித்தது, மற்றொரு மூதாட்டியின் சுமைகளை சுமந்து வரும்போது வழி முழுவதும் திட்டித் தீர்த்து வந்த மூதாட்டியிடம் அமைதியாக நான்தான் அந்த முஹம்மத் என்று சொல்லி பண்பாட்டை வெளிக்காட்டியது என்பன ஒரு சில உதாரணங்கள்.

நபியவர்களின் வரலாறு நல்ல முன்மாதிரி

நபியவர்களுடன் வாழ்ந்தவர்கள் மாத்திரமன்றி நபியவர்கள் மறைந்த பின்னரும் கூட நபியவர்களைப் பற்றிக் கற்கின்ற மக்கள் அன்னாரது அழகிய முன்மாதிரிகளால் கவரப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களது கூற்றுக்களே சான்று பகர்கின்றன.

> **திருக்குர்ஆனுக்கும் தூதர் முஹம்மத் அவர்களுக்கும் என் விசுவாசத்தை வழங்குகிறேன். குர்ஆனின் கொள்கைக்கு இணங்க ஒரே விதமான ஆட்சியை உலகெங்கும் நிறுவக் கூடிய காலம் வெகுதூரத்தில் இல்லை.**
>
> **- நெப்போலியன் -**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடியைத் தெரிவு செய்க.

1.



A



B



C

D

2.



A



B



C



D

வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

3. நாளை புதன்கிழமை எனின், இன்று என்ன நாள்?

i. வியாழன் ii. வெள்ளி
iii. செவ்வாய்

4. DEF - EFD - FED - ....

i. DEF ii. DFE iii. FDE

5. தாவரம் ஒன்றில் எப்போதும் இருப்பது.

i. பழம் ii. காய் iii. வேர்

6. ஓடும் பேருந்தில் இருக்க வேண்டியவர்

i. பயணி ii. நடத்துனர்
iii. சாரதி

7. எண் கோலத்தை அவதானியுங்கள். வெற்றிடத்திற்கு வர வேண்டிய இலக்கம்.

	5	
2	15	3
	5	

	12	
14	24	10
	12	

	10	
15	—	15
	20	

i. 30 ii. 20 iii. 25

பின்வரும் சொற்களுக்கு அதே கருத்தைத் தரும் இரு சொற்களின்கீழ் கோடிடுக.

8. வழி (காற்று, தெரு, நோவு, சாலை)

9. உவகை (சுகந்தம், மாண்பு, களிப்பு, ஆனந்தம்)

10. இரவு (நிசி, அல், மதியம், நாழிகை)

11. எழில் (பொழில், வனப்பு, சுந்தரம், வானவில்)

12. வேந்தன் (அரசன், யாசகன், மந்திரி, கோன்)

பின்வரும் படங்களுடன் தொடர்புடைய பெயர்களைக் கண்டறிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

13.  (ஒளி, ஓசை, சிந்தனை)

14. (பொய்கை, கடல், சாக்கடை)

15. (தயிர், மோர், பால்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.  (கம்பீரம், சோகம், பணிவு)

17.  சூடு, குளிர்ச்சி, வெப்பம்)

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

18. தாராவோ : ....

19. சீயா : ....

பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.

20. Squares : ....

21. Eleven : ....

22. மகன் தகப்பனைவிட எப்போதும்

i. வயது கூடியவன்

ii வயது குறைந்தவன்

iii. உயரம் கூடியவன்

23. தாயைவிட மகள் எப்போதும்

i. உயரம் கூடியவள்

ii. வயது கூடியவர்

iii. வயது குறைந்தவர்

மூன்று பிள்ளைகளின் பிறந்த திகதி தரப் பட்டுள்ளது. அதனை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

i. குமார் 2005.10.10

ii. கமலன் 2005.01.10

iii. கமலா 2005.12.30

24. வயதில் மூத்தவர் யார்?

i. கமலா ii. குமார்
iii. கமலன்

25. வயதில் மிகவும் இளையவர் யார்?

i. குமார் ii. கமலன்
iii. கமலா

26. கிலோ கிராம் அலகில வாங்கும் பொருட்கள் யாவை?

i. கடலை, கிழங்கு ii துணி, அரிசி
iii. பால், சீனி

27. மணிக்கூட்டில் மிக வேகமாக அசையும் கம்பி எது?

i. மணி முள் ii. நிமிட முள்
iii. செக்கன் முள்

28. பொதிசெய்யப்பட்ட உணவுப் பொருளை வாங்கி உட்கொண்ட ஒருவர் வயிற்றுப் போக்கினால் அவதிப்படுகிறார். இதற்கு காரணமாக அமையக்கூடியது.

i. அவ்வுணவில் இனிப்புத் தன்மை அதிகம்.

ii அவ்வுணவில் கசப்புத் தன்மை அதிகம்.

iii. காலாவதியாகும் திகதி முடிவடைந்தமை.

29. முட்டையிட்டு அடைகாக்காத பிராணி எது?

i. ஆமை ii கோழி iii. புறா

30. பின்வரும் பொருட்களில் உலோகப் பாத்தி ரத்தில் இட்டு பாதுகாக்க முடியாத பொருள்.

i. கடலை ii. மா iii. உப்பு

31. புத்தளத்தில் இருந்து கொழும்பு வரை உள்ள தூரத்தை அளக்க பொருத்தமான அலகு.

i. km ii. m iii. cm

32. 

B எதைக் குறிக்கும்?

i. மாடு ii. ஆடு iii. பூனை

33. மோட்டார் சைக்கிள் ஒன்று 1 லீற்றர் பெற் றோலில் 30 கிலோ மீற்றர் செல்லும் எனின், 3000 மில்லி லீற்றர் பெற்றோலில் எத்தனை கிலோ மீற்றர் செல்லும்?

i. 90km ii. 30km iii. 90m

34. தோட்டம் ஒன்றில் தென்னை மரம், பனை மரம், கமுகு மரம் என்ற ஒழுங்கில் மரங்கள் நடப்பட்டன. அதில் 20வது மரம்

i. கமுகு மரம் ii. தென்னை மரம்
iii. பனை மரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. இரண்டு எண்களை பெருக்கும்போது வரும் விடை 20; இவ்விரு எண்களின் வித்தியாசம் 1, இவ்விரு எண்களை கூட்டும் போது வரும் விடை 9 ஆகும். அவ்விரு எண்களும் யாவை?

i. 6,4 ii. 5,3 iii. 5,4

ஒழுங்கமைக்குக.

36. ப்-பா-கா-து-பு :............................

37. ன்-சை-இ-னி :............................

38. ப்-ம-னி-பா-ன்-வ-பு :............................

39. ம்-வி-ஞா-ஞ்-ன :............................

கீழ்வரும் அமைப்பை கவனித்து விடை தருக.

	A
கு. ரஹ்மான், இல.7 ஒழுங்கை இல.7 ஜோசப் மாவத்தை வென்னப்புவ	து. மதுபாலன், இல. 16, பிரதான வீதி வவுனியா

40. இவ்வமைப்பு யாது?

41. இவ்வமைப்பில் A எதைக் குறிக்கின்றது?

42. இதைப் பெறுபவர் யாராக இருக்கலாம்?

43. இதனோடு 'தொடர்புடைய காரியாலயம் எது?

44. இதைப் பதிவு செய்து அனுப்புவதென்றால் Aயின் பெறுமதி எவ்வளவு?

45. அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழி என்பதில் உயர்திணைச் சொல்.

i. வழி ii. அரசன்
iii. மக்கள் iv. அரசன், மக்கள்

46. கமலனும் நானும் அவர்கள் வீட்டுக்குச் சென்றோம் என்பதில் தன்மைச் சொல்.

i. கமலன் ii நான்
iii. அவர்கள்

47. தோட்டக்காரன் மாட்டை அடித்துத் துரத்தினான் என்பதில் ஒன்றன் பால் சொல்

i. தோட்டக்காரன் ii. துரத்தினான்
iii. மாடு

48. யானை தனது ....க்கு பாலூட்டியது. யானையின் இளையது

i. குருளை ii. கன்று
iii. வடலி

49. முள் என்பதன் பன்மை

i. முற்கள் ii. முள்கள்
iii. முட்கள்

5ம் தர புலமைப்பரிசில் ii... (44ஆம் பக்கத் தொடர்)

51. பின்வரும் பொருட்களில் சூரிய வெப்பத்தினால் மிக விரைவாகச் சூடாகும் பொருள் எது?

i. மணல் ii. தகரம்
iii. கற்துண்டு

52. பின்வரும் எந்தத் தாவரத்தின் தண்டுகளில் வைரத் தன்மை இல்லை?

i. பப்பாசி ii. முதிரை
iii. தேக்கு

53. பட்டறையில் நெருப்பு எரியக் காற்றை வங்கும் உபகரணம்.

i. சம்மட்டி ii. துருத்தி
iii. காற்றாடி

உயிர் எழுத்துக்களை மட்டும் வைத்து கட்டத்தை நிரப்புக.

54. ☐ டதம்

55. ☐ மாற்றம்

குறியீடுகளை எழுதுக.

56. மெய்ப்பாட்டு குறி

57. மேற்கோள் குறி

58. வினாக் குறி

எமது பாடசாலை சிரமதானத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்ட எமது பெற்றோர் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

பின்வரும் பந்தியை வாசித்து பந்தியில் காணப் படும் உயிர் எழுத்து சொற்கள் தவிர்ந்த ஏனைய பெயர்ச்சொற்கள் ஐந்தினை எழுதுக.

ஒரு காட்டில் வேடன் ஒருவன் வாழ்ந்தான். அவன் முயல், ஆடு, ஆமை, மான் குட்டி போன்றவற்றை வளர்த்து வந்தான். அவன் உயிர்களிடத்தில் சிறிது அன்பும் வைத்திருந்தான். இருந்தாலும் மிருகங்களை வேட்டையாடி உண்பதை விட்டுவிடவில்லை. அக்காட்டில் சிறுத்தை, புலி, கரடி போன்றவை அதிகம் வாழ்ந்து வந்ததால் அவற்றுக்கு அஞ்சிய அவன் அவனுடைய இருப்பிடத்தை விட்டு அதிக தூரம் போவதில்லை. ஒரு நாள் அவனுடைய இருப்பிடம் நாடி வந்த மதம் பிடித்த யானையிடம் சிக்கி பரிதாபமாக உயிர் இழந்தான்.

1. .... 2. ....

3. .... 4. ....

5. ....

பந்தியில் இடம்பெற்ற தாவர உண்ணிகள் தவிர்ந்த ஏனைய விலங்குகள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக.

6. .... 7. ....

8. மதம் பிடித்த யானை என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

9. பின்வரும் தொகுதிகளுள் சாதுவான மிருகங் களின் தொகுதி:

   i. முயல், ஆடு, யானை

   ii. ஆடு, முயல், மான்குட்டி

   iii. கரடி, சிறுத்தை, புலி

10. அவன் இருப்பிடத்தை விட்டு அதிக தூரம் போவதில்லை என்பதற்கு சமமான ஒரு கூற்று.

   i. காடு முழுவதும் சுற்றி வருவது

   ii. அவன் வீட்டிலேயே வாழ்வது

   iii. குறிப்பிட்ட எல்லைக்குள் மாத்திரம் சென்று வருவது

பின்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கு பொருத் தமான கருத்தை எழுதுக.

11. How many cats : ....

12. I read books : ....

13. பின்வரும் படத்தை அவதானித்து மிகப் பொருத்தமான விடைக்குக் கோடிடுக.

   i. கிளி கூட்டில் வாழும் பறவை

   ii. தங்கக்கூண்டை பார்க்கிலும் கிளிக்கு சுதந்திரமே அதிக விருப்பமானது.

   iii. தங்கக்கூண்டில் அடைக்கப்பட்டால் கிளி குதூகலம் அடையும்.

14.



   i. பற்தூரிகை பற்களைத் தீட்டுவதற்கு உகந்ததல்ல.

   ii. பற்தூரிகையினால் பற்களை மேலும் கீழுமாக தீட்ட வேண்டும்.

   iii. விரல்களால் பற்களை துலக்குவதே அதி சிறந்தது.

15.



   i. அது ஏழைகளின் அப்பிள் எனப்படும்.

   ii. வாழைப்பழம் தானிய வகையைச் சேர்ந்தது.

   iii. வாழையில் ஓர் இனமே காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



i. இலங்கையில் மட்டுமே இதன் சேவையைப் பெறலாம்.

ii. இதன் சேவையைப் பெற அதிக பணத்தை செலவிட வேண்டும்.

iii. செய்திப் பரிமாற்றத்தை பாதுகாப்பாகப் பேணலாம்.

17. கீழே சில வாக்கியங்கள் குழம்பியுள்ளன. அதனை ஒழுங்குபடுத்த வரும் இலக்கங்களை கட்டத்தினுள் எழுதுக.

➔ வியாபாரிகள் பயிர்களை கொள்வனவு செய்ய அவனது இடத்திற்கு வந்தபோது அவனது சந்தோஷம் பன்மடங்காகியது. ☐

➔ பயிர்களை அறுவடை செய்யும்போது ஆனந்தன் ஆனந்தமாகவே காணப்பட்டான். ☐

➔ எதிர்பார்த்த இலாபம் கிடைக்காததால் ஆனந்தன் சோகத்தில் ஆழ்ந்தான். ☐

➔ அவை மூடைகளாக கட்டப்படும்போதும் அவனது முகம் மிகவும் பிரகாசமாகவே காணப்பட்டது. ☐

➔ ஆனால் பேரம் பேசும் நடவடிக்கையின்போது அவனது உள்ளம் படபடத்தது. ☐

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

18. 1296, 1297, 1298, 1299, ...

i. 3000 ii. 2000 iii. 1300

19. 3860, 3870, 3880, 3890, ...

i. 4010 ii 3990 iii. 3900

20. 9907, 9908, 9909, ...

i. 10000 ii. 9100 iii. 9910

21. 5507, 5508, 5509, ...

i. 5510 ii 5550 iii. 5501

22. 5kg அரிசியில் 4440 கிராம் அரிசி விற்கப் பட்டது. மிகுதியாக இருக்கும் அரிசியின் நிறை யாது?

i. 1kg 60g ii 560kg iii. 560g

வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணின் கீழ் கீறிடுக.

23. 1000 + ☐....... + 50 + 5 = 1955

i. 100 ii. 900 iii. 1400

24. 2000 + 600 + ☐....... + 9 = 2699

i. 09 ii 600 iii. 90

25. ☐....... + 550 + 50 + 5 = 5555

i. 500 ii. 5000 iii. 5050

26. ஒரு தடவையில் அதிகம் முட்டையிடும் பிராணி எது?

i. கோழி ii. கொக்கு

iii. ஆமை

27. ஓணான் எதில் முட்டையிடும்?

i. கூட்டில் ii. மண்ணில்

iii. பொந்தில்

28. தான் செல்லும் இடமெல்லாம் தன் குஞ்சு களைக் கூட்டிச் செல்லும் பிராணி எது?

i. யானை ii. மயில்

iii. கோழி

29. சிறகுகளை மடிக்காமல் தூங்கும் பிராணி எது?

i. தும்பி ii. தேனீ

iii. கிளி

30. இலங்கையில் 24 மணி நேரமும் இயங்கும் அரச நிறுவனம்.

i. தபால் நிலையம்

ii. பொலிஸ் நிலையம்

iii. பிரதேச செயலகம்

31. வேளாண்மை வெட்ட பயன்படுத்தும் கருவி யாது?

i. கத்தி ii. அரிவாள்

iii. வாள்

32. தொலைவிலிருந்து பார்க்கும்போது தெளி வாகத் தெரியும் நிறம் எது?

i. கறுப்பு ii. மஞ்சள்

iii. பச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. அஞ்சல் ஓட்டம்

i. சுவட்டு நிகழ்ச்சி

ii. மைதான நிகழ்ச்சி

iii. கோட்டு நிகழ்ச்சி

வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

34.

ம	ப	ம	ப
ப			ம
ம			ப
ப	ம	ப	ம

i.

ம	ம
ப	ப

ii.

ம	ப
ம	ப

iii.

ம	ப
ப	ம

35.

க	த	க	த
த			க
க			த
த	க	த	க

i.

க	த
த	க

ii.

த	க
க	த

iii.

க	த
த	க

36. மூன்று எண்களை ஒன்றுடன் ஒன்று கூட்டும் போது கிடைக்கும் விடையும் மூன்று எண்களை ஒன்றுடன் ஒன்று பெருக்கும்போது கிடைக்கும் விடைக்கு சமமாகும்.

i. 1,2,3 ii. 3,2,2 iii. 3,3,2

37. கடல் நீரை பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவது இல்லை. இதற்குரிய காரணம்.

i. கடலில் இருந்து பயிர்ச்செய்கைக்கு நீரை எடுப்பது கஷ்டமான ஒரு காரியமாகும்.

ii. கடல் நீரில் அதிகளவு உப்பு உள்ளதால்

iii. செலவு அதிகமாகும்.

38. உப்பு செய்கைக்கு பயன்படுத்தும் நீர்.

i. மழைநீர் ii. ஆற்றுநீர்

iii. கடல்நீர்

39. ஒரு மணித்தியாலத்தில் கடிகாரமொன்றில் மிகக் கூடுதலான தடவைகள் சுற்றும் முள் எது?

i. மணி முள் ii நிமிட முள்

iii. விநாடி முள்

கீழே காட்டப்பட்டுள்ள கணிதச் செய்கையை செய்து குறியீட்டுக்குரிய இலக்கங்களைக் கண்டுபிடித்து எழுதுக.

○ +
○
○
□ 4

40. ○ குறிக்கும் இலக்கம்

41. □ குறிக்கும் இலக்கம்

△ +
△
△
⊗ 4

42. △ குறிக்கும் இலக்கம்

43. ⊗ குறிக்கும் இலக்கம்

பறவைகளை இனங்கண்டு அவற்றின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.

(வான்கோழி, தீக்கோழி, மீன்கொத்தி, நீர்க்காகம், செண்பகம், காகம், குயில்)

44.

....

45. 

....

46.

....

47. 

....

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

48. களிமண் அதிகம் காணப்படக்கூடிய இடம் எது?

i. கடற்கரை ii. வயல் நிலம்

iii. ஆற்றங்கரை

49. சிவப்பு நிறம் கொண்ட வித்து எது?

i. குண்டுமணி ii திராட்சை

iii. மஞ்சாடி

50. கடும்பச்சை நிறம் கொண்ட வித்து எது?

i. பாசிப்பயறு ii. கௌப்பி

iii. கடலை

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி - 2012

மொ/பகினிகவறவெல ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, பிபிலை

எம்.ஆர்.எப். நிப்லா (170)

எம்.என். ரினாஸ் அஹ்மட் (164)

எம்.எம்.எப். பஹ்னா (160)

எம்.ஏ. அஹ்ஸன் (156)

எம்.எப். சல்மான் பஹத் (155)

எம்.ஐ. இன்ஸாப் (154)

எம்.என். அஸ்பா (153)

எம்.என். நிஸ்லா (150)

எம்.எப்.எப். பஸ்லினா (150)

எம்.ஏ.எப். பஸ்லா (142)

Alhasanath | e-magazine

புதுப்பொலிவுடன்

அல்ஹஸனாத் இணையதளம்

www.alhasanath.lk

அல்ஹஸனாத் இதழை தற்போது

E-Magazine வடிவில் பார்வையிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Islamic Book House இன்
2013 ஆம் ஆண்டிற்கான வெளியீடுகள்

77, Dematagoda Road, Colombo 09.
Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk

PUBLIC LIBRARY JAFFNA



150/=

சுகாதாரமும்
உடற்கல்வியும்
தரம் – 7

300/=

சுற்றாடல் சுகந்தம்
1875 வினா – விடைத் தொகுப்பு
தரம் – 4,5

300/=

மனைப் பொருளியல்
500 வினா – விடைகள்



300/=

English Language
Work Book & Model Papers
Grade-6

200/=

இஸ்லாம்
தரம் – 4

320/=

புலமைச் சிட்டுக்கள்
தரம் – 5

230/=

தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் – 9



200/=

English Teacher
Grade-2



245/=

மனைப் பொருளியல்
தரம் – 11

350/=

கணிதம்
தரம் – 4

350/=

கணிதம் செயல் நூல்
தரம் – 5

285/=

இஸ்லாம்
கடந்தகால வினா – விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org